பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை
ரூபா
7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 19 செவ்வாய்க்கிழமை (05-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:343

## தாய்லாந்துப் பேச்சுக்களால் உடனடிப் பலன்

# இரு பௌத்த பீடாதிபதிகள் ஒருமித்து புலிகளுக்கு ஆசி!

### அவர்களின் போக்கிற்குப் பாராட்டு

கண்டி,நவம்பர்5

**தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பௌத்த பீடாதிபதிகள் தங்கள் நல்லாசிகளைப் பொழிந்துள்ளனர். அவர்களை வெகுவாகப் பாராட்டியிருக்கின்றனர். புனித பூமியான கண்டியில், அதிலும் புத்தர் பெருமானின் புனித தந்தம் வைக்கப்பட்டுள்ள தலதா மாளிகையில் இந்த அதிசயம் நேற்று மாலை நடந்தது. தாய்லாந்தில் நடந்த இரண்டு சுற்றுச் சமாதானப் பேச் சுக்களின் உடனடிப் பலன் இதுவாகும்.**

புலிகளோடு பேசப் போகக்கூடாது. போரைத் தொடர்ந்து நடத்தி அவர்களைத் தோற்கடிக்கவேண்டும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியின்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசை வற்புறுத்தி வந்தவர்கள் பௌத்த பீடாதிபதிகள்.

ரணில் விக்கிரமசிங்க கடந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியை அமைத்ததும் சமாதானத்துக்காக மக்கள் தமக்கு அளித்த ஆணைப்படி புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தப்போவதாக அறிவித்த போதும் பீடாதிபதிகள் அதற்குத் தமது கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்தார்கள்.

ரணில் விக்கிரமசிங்க எப்படியோ

(12ஆம் பக்கம் பார்க்க)

### கடற்படை உறுப்பினர் சுட்டுத் தற்கொலை

ஹபரணைப் பகுதியில் உள்ள அளுத் ஓயாவில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் கடற்படையைச் சேர்ந்த ஒருவர் மரணம் அடைந்தார்.

இந்த கடற்படை உறுப்பினர் தனக்குத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்று ஹபரணைப் பொலீஸார் தெரிவித்தனர்.

மரணமான கடற்படை உறுப்பினரின் நாட்குறிப்பில் தற்கொலைக்கான காரணம் குறிப்பிடப்பட்டு இருந்ததாக பொலீஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

## நான்காம் கட்டப் பேச்சுக்கள் ஜப்பானிய நகரில் நடக்கும்?

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நான்காம் கட்டப் பேச்சு ஜப்பானில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக செய்தி ஏஜென்சி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மூன்றாம் கட்டப் பேச்சுக்களை நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடத்துவதற்கு இரு தரப்புக்களும் இணங்கியுள்ளன.

நான்காம் கட்டப் பேச்சை ஜப்பானில் நடத்தும்படி அந்நாட்டு அரசு விடுத்த கோரிக்கையை ஏற்று அந்நாட்டின் கிஜோட்டோ நகரில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

நான்காம் கட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நடத்த ஏறகனவே இணக்கம் காணப்பட்டிருந்தது தெரிந்ததே. (ம-3)

## தமிழ்ச்செல்வன், கருணா இன்று கிளிநொச்சி திரும்புவார்கள்

தாய்லாந்து சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றிய விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளில் இருவரான சு.ப.தமிழ்ச்செல்வனும் கேணல் கருணாவும் இன்று கிளிநொச்சிக்குத் திரும்புவர்.

அரச பிரதிநிதிகளாகப் பேச்சில் பங்குபற்றிய அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், ரவூப் ஹக்கீமும் நேற்று முன்தினம் இரவே கொழும்பு திரும்பி விட்டனர். அமைச்சர் மிலிந்த மொறகொட அமெரிக்கா சென்றார்.

விடுதலைப் புலிகளின் ஏனைய பிரதிநிதிகளான வி.உருத்திரகுமார் அமெரிக்காவுக்கும் ஜோய் மகேஸ்வரன் அவுஸ்திரேலியாவிற்கும் திரும்பியிருக்கின்றனர்.

புலிகளின் பிரதிநிதிகள் குழுவின் தலைவரான அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தனது மனைவி அடேல் பாலசிங்கம் சகிதம் இன்று லண்டன் திரும்புகின்றார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவுக்கு எதிரான தீர்ப்பை ஆட்சேபித்து மட்டக்களப்பில் நாளை ஆர்ப்பாட்டப் பேரணி!

மட்டக்களப்பு,நவ.5

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு 200 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து மட்டக்களப்பில் நாளை ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெறவுள்ளது.

சமாதான சூழ்நிலை உருவாகி, தாய்லாந்தில் பேச்சுக்கள் இடம் பெறும் இந்தச் சந்தர்ப்பத்தில் தேசிய தலைவர் பிரபாகரனுக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பால் சமாதானப் பேச்சுக்கள் பாதிக்கப்படும் என்று மட்டக்களப்பு பொது அமைப்புக்களின் ஒன்றியமும் மட்டக்களப்பு அபிவிருத்தி ஒன்றியமும் தெரிவித்துள்ளன.

துறைநீலாவணை, வாகரை, படுவான்கரை போன்ற பகுதிகளிலிருந்து நாளை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி வளாகத்தைச் சென்றடையும்.

மட்டு.அரச அதிபர் மோனகுருசாமியிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்படவுள்ளது. (ம)

### கைக்குண்டு வீச்சில் ஒருவர் பலி!

கொழும்பு,நவ.5

அகங்கம பஞ்சாவிய சந்தியில் நேற்று நடைபெற்ற கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்றில் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார் என அகங்கம பொலீஸார் தெரிவித்தனர்.

இருவருக்கிடையே இடம்பெற்ற வாக்குவாதத்தை அடுத்தே இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதுவரை சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என அகங்கம பொலீஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

### பட்டாசு வெடித்த இளைஞனின் கண்ணில் காயம்

யாழ்ப்பாணம்,நவ.5

தீபாவளியை முன்னிட்டு பட்டாசு கொளுத்தியவர் அது வெடித்து கண்ணில் படுகாயமடைந்தார்.

மட்டுவில் வடக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சதாசிவம் - ஐங்கரன் (வயது 20) என்ற இளைஞரே தனது இடது கண்ணில் படுகாயமடைந்தவராவார்.

கொளுத்தி வீசிய பட்டாசு நீண்ட நேரமாக வெடிக்காததால் அதை எடுப்பதற்குச் சென்று அருகில் குனிந்த போது அது திடீரென வெடித்ததில் இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

பட்டாசு வெடித்தபோது எழுந்த தீப்பொறி அவரது கண்ணைத் தாக்கியதில் கண்ணில் படுகாயமடைந்தார். (ம-4)

## திருகோணமலைக் கடலில் கைதான புலிகள் மீது சட்டப்படி நடவடிக்கை

### அமைச்சர் மாரப்பன கடற்படைத் தளத்துக்கு விஜயம்

திருகோணமலைக் கடலில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன படையினருக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

திருகோணமலைக்கு விஜயம் செய்த பாதுகாப்பு அமைச்சர், சட்டத்தையும் ஒழுங்கையும் உரிய முறையில் நிலைநாட்டவேண்டிய அவசியத்தை படை அதிகாரிகளிடம் வலியுறுத்தினார்.

சமாதான முயற்சிகள் வெற்றிகர

(12ஆம் பக்கம் பார்க்க)

## காஞ்சிரங்குடா முகாமைச் சேர்ந்த 15 அதிரடிப்படையினர் இடமாற்றம்

கொழும்பு,நவ.5

அம்பாறை, காஞ்சிரங்குடா அதிரடிப் படை முகாமின் பொறுப்பதிகாரி எரிக் பெரேரா உட்பட 15அதிரடிப் படையினர் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அந்த முகாம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்திய பொதுமக்கள் மீது அதிரடிப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் எட்டுப்பொதுமக்கள் உயிரிழந்ததும் 40இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததும் தெரிந்ததே.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் காகங்கள் செத்து மடிகின்றன!

### ஹோட்டல் உரிமையாளர்கள் காரணமா?

கொழும்பு,நவ.5

கொழும்பின் பல பகுதிகளில் கடந்த நான்கு, ஐந்து நாள்களாக நூற்றுக்கணக்கான காகங்கள் செத்து மடிந்துள்ளன. இதற்கான காரணங்களை ஆரம்பத்தில் அறிய முடியவில்லை எனினும் தற்போது ஹோட்டல் உரிமையாளர்களே இக்காகங்களின் இறப்புக்குக் காரணம் என நம்பப்படுகிறது.

பெருமளவு உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருவதால் காகங்களின் இரைச்சல், எச்சம் இவர்களைப் பாதிக்கலாம் அல்லது ஹோட்டலின் அழகைக் கெடுக்கலாம் என ஹோட்டல் உரிமையாளர்கள் கருதுகின்றனர். இதனால் அவர்கள் காகங்களை இலக்கு வைத்துள்ளனர். இந்த நடவடிக்கையால் சுற்றாடல் மாசுபடல் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மக்களுக்கு இருந்து வந்த ஐயங்களை சமாதானப் பேச்சுக்கள் நீக்கியுள்ளன

### நாடு திரும்பிய அமைச்சர் ஹக்கீம் கருத்து

கொழும்பு,நவ.5

வடக்கு-கிழக்கிற்கு கூட்டுச் செயலணி அமைப்பது உட்பட பல விடயங்கள் தொடர்பாக மக்களுக்கு இருந்துவந்த சந்தேகங்களை தாய்லாந்து சமாதானப் பேச்சுக்கள் தெளிவுபடுத்திவிட்டன என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கூறுகிறார்.

தாய்லாந்துப் பேச்சுக்களில் பங்குபற்றிய அவர், நேற்று முன்தினமிரவு நாடு திரும்பிய பொழுதே இதனைக் கூறினார்.

தாய்லாந்திலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு திரும்பும் வழியில் செய்தியாளர்களுடன் உரையாடிய அமைச்சர் ஹக்கீம், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அரசியல் பிரச்சினைகளுக்கு பரஸ்பர புரிந்துணர்வு மூலம் இரு தரப்பினரும் இணககப்பாடுகளுக்கு வந்திருக்கிறோம். இவை தொடர்பாக விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அமைச்சர் பீரிஸுக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படும்.

இம்மாத இறுதி வாரத்தில் ஒஸ்லோவில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் பெருந்தொகை உதவிக்கு உறுதி அளிக்கப்படும் என்பதில் நம்பிக்கை இருக்கிறது. சமாதான முயற்சிகளின் வெற்றி குறித்து அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

- இவ்வாறு அவர் கூறினார்.(ஐ)

### மன்னார் மாவட்டத்தில்

## இராணுவம் இருக்கும் இடங்கள் மக்கள் பாவனைக்கு விடப்படும்

மன்னார்,நவ.5

மன்னார் மாவட்டத்தில் இராணுவம் நிலைகொண்டிருக்கும் பிரதேசங்களை பொதுமக்களின் பாவனைக்கு மீண்டும்விட நடவடிக்கை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அப்பிரதேசங்களில் விவசாயம் செய்ய அனுமதி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் திஸ்ஸ கரலியத்தவும் உள்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் திரும்தி பாலசூரியவும் கடந்த சனிக்கிழமை மன்னாருக்கு வருகை தந்து நடத்திய பேச்சுக்களிலேயே இத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவர்கள் இருவரும் மன்னார்

(12ஆம் பக்கம் பார்க்க)

# தலைவர் பிரபாவுக்கு சிறைத்தண்டனையா? குடாநாட்டு பொது அமைப்புகள் ஆட்சேபம்!

யாழ்ப்பாணம்,நவ.5

மத்திய வங்கி குண்டுத் தாக்குதல் வழக்கில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு 200 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருப்பது குறித்து குடாநாட்டில் பல தரப்புக்களிலிருந்தும் அதிர்ச்சியும் ஆட்சேபமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

20 வருட யுத்தம் ஓய்ந்து, ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு யுத்தநிறுத்தம், சமாதானப் பேச்சுக்கள் என்று நாட்டில் மிகவும் அமைதியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் இந்த வேளையில் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கு 200 வருட சிறைத்தண்டனை விதித்திருப்பது பலத்த அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியிருப்பதாக பொது அமைப்புக்கள் மற்றும் ஒன்றியங்கள் வெளியிட்ட பல அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சிறைத்தண்டனை உத்தரவானது தமிழ்மக்கள் மத்தியில் சமாதானம் தொடர்பாகவும் -

அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் தொடர்பாகவும் -

நம்பிக்கையீனங்களை ஏற்படுத்தும் எனவும் -

தற்போது நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்களில் இது பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும் எனவும் -

யாழ்மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம், விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம், சிகை ஒப்பனையாளர் சங்கம், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கம் ஆகியன தமது ஆட்சேப அறிக்கைகளில் தெரிவித்திருக்கின்றன. (ஐ-4)

## இரண்டு மணிநேரத்தில் கடவுச்சீட்டு

குடிவரவு குடியகல்வு திணைக்களம் இரண்டு மணிநேரத்தில் கடவுச்சீட்டு வழங்கும் திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றது. இத்திட்டம் வெற்றியளித்திருப்பதாக திணைக்களத்தின் பிரதம கட்டுப்பாட்டாளர் மர்வின் விஜேசேகர கூறியிருக்கிறார்.

இதற்கு முன்னர் தூர இடங்களில் இருந்து கடவுச்சீட்டுப்பெற வருவோர் திணைக்களத்தில் மிக நீண்டநேரத்தைச்செலவிட வேண்டியிருந்தது. புதிய திட்டத்தின் மூலம் அவர்கள் இரண்டு மணிநேரத்திலேயே காரியத்தை முடித்துவிட்டு வீடுதிரும்ப முடிகிறது.

இவ்வாறு விரைவில் கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படுகின்ற போதிலும் மேலதிககட்டணம் அறவிடப்படுவதில்லை

- அவர் இவ்வாறு மேலும் தெரிவித்தார். (ஐ)

## தீபாவளித் திருநாளை மக்கள் மகிழ்வுடன் கொண்டாடினர்

யாழ்ப்பாணம்,நவ.5

குடாநாட்டு மக்கள் தீபாவளித் திருநாளை நேற்றைய தினம் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்பு போர் ஓய்ந்து, சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சமயத்தில் வெகு அமைதியாக தீபாவளியை மகிழ்ச்சியுடன் மக்கள் கொண்டாடினர்.

கொட்டும் மழைக்கு மத்தியிலும் மக்கள் ஆலயங்களுக்குச் செல்வதிலும் உறவினர் வீடுகளுக்குச் செல்வதிலும் ஆர்வங்காட்டினர். பல ஆண்டுகளின் பின்னர் தீபாவளியை முன்னிட்டு குடாநாட்டில் பட்டாசுச் சத்தங்களைக் கேட்கமுடிந்தது. சிறுவர், சிறுமியர் மத்தாப்பூக்களைக் கொளுத்தி மகிழ்ந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் சமாதானச் சூழலில் நேற்று தீபாவளிப் பண்டிகை மிக கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

இந்து ஆலயங்களில் நேற்றுமுன்தினம் இரவும், நேற்று அதிகாலையும் பெருந்தொகையான மக்கள் விசேட பூசை, வழிபாடுகளில் கலந்துகொண்டனர்.

சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் எங்கும் பட்டாசு வெடியோசை முழங்கியது. எவ்வித அச்சமுமின்றி சிறுவர்களும் பெரியவர்களும் பட்டாசு கொளுத்தி மகிழ்ந்தனர்.

மட்டக்களப்பு, கல்முனை பிரதேசங்களிலும் மிகக்குதூகலமாகத் தீபாவளி கொண்டாடப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் மழையுடன் தீபாவளி பிறந்தது. இந்துக்கள் ஆலயங்களுக்குச் சென்று விசேட பூஜைகளில் கலந்துகொண்டனர்.

காஞ்சிரங்குடாச் சம்பவம் காரணமாக திருக்கோவில் பகுதியில் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படவில்லை. (ஐ-ம-10)

## புலிகளின் மாவீரர் தினத்துக்கு திருமலையில் விரிவான ஏற்பாடுகள்

திருகோணமலை,நவ.5

இம்மாதம் 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படவிருக்கும் மாவீரர் தினத்தை முன்னிட்டு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. திருகோணமலைப் பிரதேசத்திலுள்ள முக்கிய வீதிகள் அலங்கரிக்கப்பட வேண்டுமெனவும் 27ஆம் திகதி இரவு 7.26 மணிக்கு எல்லா வீடுகளிலும் விளக்கேற்றி வைக்கவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் திருமலை வள்ளுவர் கோட்டத்தில் இடம்பெற்ற கருத்தரங்கிலேயே இத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பொது அமைப்புக்கள், முஸ்லிம் சங்கங்கள் என்பன இதில் பங்குகொண்டன.

புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சி.திலக், நகரப் பொறுப்பாளர் ரமேஷ் ஆகியோர் கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

கலாசார மண்டபத்தில் நடைபெறவிருக்கும் மாவீரர்தின நிகழ்வுகளில் மாவட்ட எம்.பிக்களும் கலந்துகொள்வர். (ம)

## கருவிலேயே குழந்தையின் ஆரம்ப கல்வியை திட்டமிடும் காலம் இது!

### பெற்றோர் தினவிழாவில் குருமுதல்வர் உரை

யாழ்ப்பாணம்,நவ.5

ஒரு சிசு தாயின் வயிற்றில் கருவாக இருக்கும்போதே அதன் ஆரம்பக் கல்வியை திட்டமிடுவதை மேற்குநாடுகளில் இன்று காணக்கூடியதாக உள்ளது. இது ஒரு குழந்தைக்கு ஆரம்பக் கல்வி எத்துணை அவசியமானது என்பதை சிந்திக்க வைக்கிறது.

யாழ்மறைக்கோட்ட குருமுதல்வர் ஜே.பி.ச.செல்வராஜா அடிகள் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கார்மேல் சிறுவர் பாடசாலையின் பெற்றோர்தின விழா அண்மையில் புனித ஜோன் பொஸ்கோ பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

குருமுதல்வர் அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

குழந்தைகள் தங்கள் சூழலில் இருந்தே கல்வியை பெறத் தொடங்குகின்றன. எனவே, குழந்தைகளின் சூழல் கல்வி புகட்டலுக்கான சரியான களமாக இருக்கவேண்டும். தற்போதைய குழந்தைகள் சிசுவாக இருக்கின்ற நிலையிலேயே கூடிய



கவனிப்பைக் கொண்டனவாக உள்ளன. சூழலின் தாக்கங்களை அவை பிரதிபலிக்கின்றன. இது அவைகளின் வளர்ச்சியில் ஏற்பட்டிருக்கும் மாற்றமாகும். எனவே, கருவில் இருந்தே குழந்தைகளுக்கு நல்ல ஆரம்பக் கல்வியைத் திட்டமிட்டுவிட வேண்டும் - என்றார்.

கார்மேல் பாலர் பாடசாலையின் முதல்வர் அருட்சகோதரி ஜெறோம் ஆசியுரை வழங்கினார். சென்.ஜோன் பொஸ்கோ பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி செல்வராணி மற்றும் பெற்றோர் பிரதிநிதி ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

பாலர்களின் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ஐ)

## ஜப்பானிய தூதர் மட்டக்களப்பு விஜயம்

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்.

மட்டக்களப்பு பாதுகாப்பு நிலைவரம் குறித்து 233ஆவது படைப்பிரிவு தலைமையலுவலகத்தில் இராணுவ அதிகாரிகளைச் சந்தித்து அவர் விவரங்களைக் கேட்டறிந்தார்.

கல்குடா அகதி முகாமையும் பார்வையிட்ட அவர், மட்டக்களப்பு லேக்வியூ விருந்தினர் விடுதியில் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் எம்.பிக்களையும் சந்தித்தார்.

அத்தோடு கண்காணிப்புக்குழு, சமாதானக்குழு ஆகியவற்றின் உறுப்பினர்களையும் சந்தித்துப் பேசினார்.

பேத்தாளை அகதி முகாமுக்கு தூதுவர் வருவதாக அறிவிக்கப்பட்டபோதிலும் வரவில்லை. பொது மக்களும் அதிகாரிகளும் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளையும் இவரை வரவேற்கக் காத்திருந்தனர். (ம)

## தவறுதலான நடவடிக்கை காரணமாக ஒட்சிசன் சிலிண்டர் மோதி மூன்று தாதியர்கள் காயம்

### யாழ். ஆஸ்பத்திரியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,நவ.5

யாழ்.போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் ஒட்சிசன் சிலிண்டர் ஒன்றை தவறுதலாகத் திறந்தபோது ஏற்பட்ட விபத்தில் மூன்று தாதியர்கள் காயமடைந்தனர். சிற்றூழியர் ஒருவர் மூச்சுத் திணறி மயக்கமடைந்தார். இயந்திர சாதனங்கள் சிலவும் சேதமடைந்தன.

இந்தச் சம்பவத்தில் ஜெயராசா ரூபி(வயது 36), கேமகேஸ்வரி (வயது 27), எஸ்.ஜெயக்குமார் (வயது30) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். சிற்றூழியரான எஸ்.சிவராசா (வயது 29) என்பவரே மயக்கமடைந்தவராவார்.

வெற்று சிலிண்டர்களை ஒட்சிசன் நிரப்புவதற்காக கொழும்புக்கு அனுப்புவதற்கான ஆயத்தப்பணிகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோதே மேற்படி சம்பவம் இடம்பெற்றது. வெற்று சிலிண்டர்களின் அடைப்புக்களை கழற்றிவிட்டே அவற்றை கொழும்புக்கு அனுப்புவது வழமை.

அந்தப் பணி இடம்பெற்றுக்கொண்டிருந்த சமயம் அதற்குள் சிலிண்டர்களுடன் சிலிண்டராக இருந்த ஒட்சிசன் நிரப்பட்ட சிலிண்டரது அடைப்பானும் திறக்கப்பட்டது.

அடைப்பான் திறக்கப்பட்டதும் உள்ளே அடைபட்டிருந்த ஒட்சிசன் வெளியே சீற, உதைப்பினால் சிலிண்டர் பின்நோக்கித் தூக்கியெறியப்பட்டது. அந்த வேகத்தில் எதிரே இருந்த கதவை உடைத்தவாறு வார்ட்டினுள் நுழைந்தது சிலிண்டர். தொடர்ந்து வேகமாக நகர்ந்த சிலிண்டர் வார்டில் கடமையாற்றிக்கொண்டிருந்த தாதியர்களின் கால்களைப் பதம் பார்த்தது. இதனால் அவர்களுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. நோயாளர் கட்டில்கள் இரண்டையும், இரத்தத்தில் இருக்கும் ஒட்சிசனின் அளவைக் கணிக்கும் கருவி ஒன்றையும்கூட மோதி நொறுக்கியது சிலிண்டர்.

இறுதியில் வார்ட் சுவருடன் மோதுண்டே சிலிண்டர் தனது பயணத்தை நிறுத்திக்கொண்டது.

கடந்த காலங்களிலும் இதுபோன்ற சில சம்பவங்கள் யாழ்.ஆஸ்பத்திரியில் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-8-9-10-15)

## கந்தசஷ்டி கால நிகழ்வுகள்

கந்தசஷ்டி நாள் இசைப்பேருரை இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 10ஆம் திகதி வரை நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 5.00 மணிமுதல் 6.00 மணிவரை முருகன் பெருமை என்னும் பொருள் பற்றி பிரமஸ்ரீ சிவ. வை.நித்தியானந்தசர்மா இசைப் பேருரை நிகழ்த்துவார். (எ)

★ ★ ★

அராலி மத்தி நுணண்பதி முருகமூர்த்தி ஆலய கந்தசஷ்டி அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து 15நாள்கள் நடைபெறவுள்ளது.

★ ★ ★

இணுவில் கந்தசுவாமி கோயிலில் கந்தசஷ்டி திருவிழா இன்றுமுதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு சூரசங்காரமும் மறுநாள் மாலை 4.30 மணிக்கு திருக்கல்யாணமும் இடம்பெறவிருக்கின்றன. நாதஸ்வர வித்துவான் கே.ஆர்.சுந்தரமூர்த்தியின் நாதஸ்வரக் கச்சேரிதினமும் 4.30 மணிக்கு இடம் பெறும். (எ-3)

★ ★ ★

கந்தசஷ்டி விரத காலத்தை முன்னிட்டு தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் தினமும் மாலை 4.30 மணிமுதல் 'சைவசமயம்' என்ற தலைப்பில் இரா.செல்வவடிவேல், 'தனி வழிக்குத்துணை' என்ற தலைப்பில் ஆ.சிவநாதன், 'படைவீடுடைய பரமன்' என்ற தலைப்பில் சிநவரத்தினம் ஆகியோர் நிகழ்த்தும் சொற்பொழிவுகள் நடைபெறும். (எ)

★ ★ ★

அராலி வடக்கு, மயிலியன்புலம் கந்தசுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டி விரத காலத்தை முன்னிட்டு தினமும் காலை 9.00 மணிமுதல் மாலை 5.30 மணிவரை கந்தபுராணபடனம் இடம் பெறும். இறுதிநாள் நிகழ்வில் திருக்கல்யாணம் நடைபெறும். (எ)

★ ★ ★

சுழிபுரம், பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் கந்தசஷ்டி விரதகாலத்தில் தினமும் பிற்பகல் 1மணிமுதல் பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் உரையுடன் கந்தபுராண படனம் நடைபெறவுள்ளது. (எ-28)

## குழந்தைகளுக்கான கல்விச் சூழல் வீடுகளிலும் உருவாக்கப்பட வேண்டும்

### பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் உரை

மாணவருக்கு வகுப்பறையில் வைத்துப் பாடம் புகட்டுவதுதான் கல்வி என்ற நிலை இன்று மாறிவிட்டது. பாடமேம்பாட்டுக் கல்வித்திட்டத்தின் பிரகாரம் நல்ல கல்விச் செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிறிய பாடசாலைகளில்தான் மாணவர்கள் அடிப்படைக் கல்வியைச் சிறந்த முறையில் பெறக்கூடியதாக உள்ளது. மாணவர்களின் கல்வி அறிவை விருத்தி செய்து அவர்களை ஊக்குவிக்கும் பொறுப்பு பெற்றோர்களிடமும் உள்ளது. பெற்றோர்கள் பிள்ளைகளைக் கல்வித் துறையில் முன்னேற்றம் அடையச் செய்யவேண்டிய சாதகமான சூழ்நிலையை தங்கள் வீடுகளில் உருவாக்கிக் கொடுக்கவேண்டியதும் அவசியமானது.

வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுநர்தினமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் வலிகாமம் கல்விவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார் வித்தியாசாலையின் அதிபர் வி.நடராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது :-

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வயதுக்கு அதிகமான சுமைகளைச் சுமத்தக்கூடாது. வீட்டு வேலைகளைச் சரிவரச் செய்துவிட்டுத்தான் பாடசாலைக்குப் போகவேண்டும் என்று பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வற்புறுத்துவதையும் தவிர்க்கவேண்டும். ஆரம்பக் கல்விதான் ஒரு மாணவனின் கல்வி மேம்பாட்டுக்கு அத்திவாரமாக உள்ளது. ஆகவே வீடுகளில் பெற்றோர்கள் பிள்ளைகளின் மீது அன்பு செலுத்தி வளர்க்கவேண்டியதும் அவசியம். பிள்ளைகள் கேள்விகேட்பதை அலட்சியப்படுத்தக்கூடாது. தக்க பதில் கூறி அதன் அறிவை ஊக்குவிக்கவேண்டும். வீட்டில் பிள்ளைகள் கற்றல் தொடர்பான வேலைகளைச் செய்யும்போது தவறுகள் ஏற்பட்டால் அவர்களின் ஊக்கத்தைக் கெடுக்கும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டாம் - என்றார்.

நிறுவுநர்தின உரையை முன்னாள் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபர் சைவப் புலவர் சு.செல்வத்துரை நிகழ்த்தினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சங்கானை மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் எம்.ஏ.தவநாதன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (ஐ-135)

பாடசாலை அதிபர்களுக்கு

# சமூகச் சீரழிவுகள் குறித்து விழிப்புணர்வு அவசியம்!

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.5

தீவகப் பாடசாலைகளின் அதிபர்கள், சமூகச் சீர்கேடுகள் தொடர்பாக மிக விழிப்பாக இருக்கவேண்டும். சமூகத்தில் தற்பொழுது இடம்பெற்று வரும் இந்தச் சீர்கேடுகள் பாடசாலை மட்டத்தில் ஊடுருவுவதற்கு எந்தவகையிலும் அனுமதிக்கக்கூடாது.

வேலணைக் கல்விக் கோட்டப் பணிமனையில் நடந்த வேலணைக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.ராதாகிருஸ்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மைக்காலமாக அதிகரிக்கும் இந்தச் சீர்குலைவுகள் தீவகத்தில் தலைதூக்க அனுமதிக்க இயலாது. நாட்டில் விவரம் தெரியாத பாடசலைச் சிறார்களும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

வேதனை நிறைந்த இந்தத் துயரங்கள் பாடசாலை மட்டத்தில் பரவுவதைத் தடுப்பதற்கு, அதிபர்கள் மற்றும் பாடசாலைச் சமூகம் என்பன விழிப்பாக செயற்படவேண்டும்.

சில இடங்களில் சிறார்கள் துஸ்பிரயோகத்திற்கும் மற்றும் உடலியல் ரீதியான துன்பங்களுக்கும் உட்படுத்தப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சமூகத்தில் இலைமறை காயாக இருக்கும் இது தொடர்பான தீய சக்திகள் உரியவர்களால் இனங்காணப்பட்டு அடையாளப்படுத்தப்படும் காலம் வரை நாம் காத்திருக்கக்கூடாது. விளைவுகள் விபரதமானால் அப்பாவிச சிறார்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும். - என்றார் அவர். (ஒ-88)

### சதுரங்கம் நூல் வெளியீடு

தென்மராட்சி கல்வி வலயப் பணிமனை சுகாதாரம், உடற்கல்வி மன்றம் வெளியிடும் 'மெய்வண்ணம்' இதழின் ஐந்தாவது இதழ் சதுரங்கம் இதழாக வெளிவருகின்றது.

இந்த இதழின் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் க.குமாரசாமி தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மெய்யியற்துறை பேராசிரியர் நா.ஞானகுமாரன் கலந்துகொள்வார். தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மு.வ.செல்வராசா வெளியீட்டுரை நிகழ்த்துவார். (எ-3)

# சுதந்திரக்கட்சி அமைப்பாளர் சிலர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்கள்

கொழும்பு,நவ.5

40இற்கும் அதிகமான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தேர்தல் தொகுதி அமைப்பாளர்களை அப்பதவிலின்றும் நீக்கிவிடுவதென ஸ்ரீல.சு.கட்சித் தலைமைப்பீடம் முடிவுசெய்துள்ளது.

கட்சியைப் புனரமைக்கும் நோக்கில் இம்முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும், பதவி நீக்கப்படவுள்ளோரில் 1994 முதல் 2001 வரை ஆட்சியில் இருந்த பொ.ஐ.மு. அரசில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவி வகித்த சிலரும் அடங்குவர் என்றும் அறியவந்துள்ளது.

காலியாகும் இப்பதவிகளுக்கு கட்சியின் தலைமைப் பீடத்துடன் நெருக்கமானவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். ஜனாதிபதியின் செயலாளர் அலுவலகத்தைச் சேர்ந்த 4 உத்தியோகத்தர்களும் இப்புதிய பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது. (ஒ)



யாழ்.பண்ணாகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் ராணி சீதரன் சிறுகதை, சிறுவர்பாடல் துறைகளுக்கு ஆற்றிவரும் பணியைப் பாராட்டி அண்மையில் கண்டி சிட்டி மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். இதன்போது எடுக்கப்பட்ட படம் இது. (எ)

# பொ.ஐ.மு. அல்லது ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்கத் தயார்!

## சிஹல உறுமய அறிவிப்பு

கொழும்பு,நவ.5

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத்தேர்தல் நடத்தப்படுமானால், தமது கட்சியின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடனோ அல்லது ஜே.வி.பியுடனோ கூட்டுச் சேர்ந்து தேர்தலில் போட்டியிடத் தமது கட்சி தயாராயுள்ளதாக சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

மேலும், பொதுத் தேர்தலொன்று நடைபெற்று ஒரு வருடம் கூடப் பூர்த்தியாகாத நிலையில், புதிதாகப் பொதுத்தேர்தல் நடத்தப்படுவது அவசியமற்றதாகுமெனவும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். (ஒ)

# ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் அதிகாரங்கள் வரையறையற்றவையா?



அரசமைப்புக்கான 19ஆவது திருத்தம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினையடுத்து அரசமைப்பில் ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்கள் மற்றும் நாடாளுமன்றத்திற்குரிய அதிகாரங்கள் குறித்து ஆராய்கிறார் நீதிசேவை ஆணைக்குழுவின் உறுப்பினரும் அரசமைப்பு தொடர்பான வல்லு நருமான கலாநிதி ஜயதிஸ்ஸ டி கொஸ்தா. "தினமின" நாளிதழில் வெளியான அவரது கருத்தை தமிழில் தருகிறோம்.

அரசமைப்புச் சட்டமே நாட்டின் அடிப்படையான சட்டமாகும். இன்று நடைமுறையிலுள்ள 1978ஆம் ஆண்டின் ஸ்ரீலங்கா ஜனநாயகக் குடியரசின் அரசமைப்புச் சட்டத்தின் 42ஆவது பிரிவில், கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*"அரசமைப்புச் சட்டத்தின் கீழ் பொதுமக்களின் பாதுகாப்பு சம்பந்தமாகத் தற்போது நடைமுறையில் இருக்கும் சட்டங்கள் உட்பட, எழுத்தில் பேணப்படும் வேறெச்சட்டத்தின் கீழும் தனது அதிகாரங்களை செயற்படுத்தும்போது, அவற்றை உரிய முறையில் நிறைவேற்றும் போது ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு பதில் சொல்லக் கடமைப்பட்டவர் ஆகிறார்."*

அரசமைப்பின் இந்தப் பிரிவின்படி ஜனாதிபதியொருவர் நாடாளுமன்றத்துக்குப் பதில் கூறவேண்டிய பொறுப்பு உடையவராகிறார். இருப்பினும் 1978ஆம் ஆண்டின் அரசமைப்பில் எந்தவொரு இடத்திலும் நாடாளுமன்றம் தன் தீர்மானங்கள் பற்றியோ நடவடிக்கைகள் பற்றியோ ஜனாதிபதிக்குப் பதிலிறுக்கவேண்டுமெனக் குறிப்பிடவில்லை.

அரசமைப்புச் சட்டமே நாட்டின் அடிப்படையான சட்டம் என மேலே குறிப்பிட்டிருந்தேன். அந்தவகையில், நாட்டின் அடிப்படைச் சட்டத்தைக் கையாள்வதில் எந்த வகையிலும் தவறு ஏற்படாத வகையில், சரியாகப் பேணப்படுவது அவசியமாகும். இந்த அடிப்படைச் சட்ட விதிகளை மீறி தாம் விரும்பிய விதத்தில் - செயற்படும் விதத்தில் - வரையறையற்ற அதிகாரம் குறிப்பிட்ட நிறைவேற்று அதிகாரமுடைய நபருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

அரசமைப்புச் சட்டத்தின் 70ஆவது பிரிவில் நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவதற்கு ஏற்புடைய சந்தர்ப்பமாகச் சில சந்தர்ப்பங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றமொன்று தனது ஒரு வருட ஆயுள் காலத்தைப் பூர்த்தி செய்த பின்னரே, அதனைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ளது. பதவியேற்ற அரசின் கொள்கை விளக்கவுரை மீதான வாக்கெடுப்பில் தோல்வியடைந்தாலோ, வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் தோல்வியடைந்தாலோ அல்லது அரசுக்கெதிராகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீமானத்தில் தோல்வியுறும் சந்தர்ப்பத்திலோ, நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. இச்சட்டத்தின்படி நாடாளுமன்றத்தைக கலைத்து விடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே உண்டு. வரவு- செலவுத் திட்டம் தோல்வியடையும் சந்தர்ப்பம் தவிர்ந்த மற்றெல்லாச் சந்தர்ப்பங்களிலும் சட்டத்தின் 70 ஆம் பிரிவின் பிரகாரம் முடிவு மேற்கொள்ளும கடைசி அதிகாரம் ஜனாதிபதியிடமே இருந்தபோதும், ஜனாதிபதிக்கு எதிரான - நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டிருப்பின், நாடாளுமன்றை ஜனாதிபதியால் கலைக்க முடியாது. ஜனாதிபதிக்கு நாடாளுமன்றைக் கலைக்கும் அதிகாரம் இருந்தபோதும், நாடாளு

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

மன்றத்தைக் கலைத்துவிடுவது என நாடாளுமன்றப் பெரும்பான்மை உறுப்பினர்கள் தீர்மானிப்பராயின், அதனைக் கலைக்காமல் விடுவதற்கு ஜனாதிபதிக்குச் சட்டப்படியான மற்றும் தார்மீக உரிமை கிடையாது.

அரசமைப்புச் சட்டத்தின்படி ஜனாதிபதிக்கு வரையறையற்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளனவா? வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை தவறான விதத்தில் பயன்படுத்த சந்தர்ப்பம் உண்டா? என்பது பற்றி ஆராய்ந்து பார்க்கலாம்.

அரசமைப்பின் 43ஆவது பிரிவின்படி நிறைவேற்று அதிகாரத்தில் முதலிடம் வகிப்பது அமைச்சரவையே. அரசமைப்பின் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி அமைச்



சட்டத்தரணி
ஜயதிஸ்ஸ டி கொஸ்தா

சரவையின் தலைவர் ஜனாதிபதியாவார். நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் நம்பிக்கையைப் பெற்றவர் எனத் தாம் கருதும் உறுப்பினரை பிரதமர் பதவிக்கு ஜனாதிபதி நியமித்தல் வேண்டும்.

அமைச்சரவை நியமனத்தில் ஜனாதிபதி பிரதமரின் சிபாரிசின் பேரில் அமைச்சர்களை நியமனம் செய்தல் வேண்டுமென அரசமைப்பின் 44ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அமைச்சரவையைக் கலைத்துவிடுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இருந்தபோதிலும், நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவை உடைய உறுப்பினர் ஒருவரையே மீண்டும் பிரதமராக நியமித்தல் வேண்டுமென அரசமைப்பின் 43ஆம், 44ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலின்போது பொதுமக்கள் வழங்கிய ஆதரவின் மூலம் அல்லது ஆணைப்படி நாடாளுமன்றத்தில் பெருபான்மையைப் பலம பெற்றிருந்த கட்சியின் தலைவர் என்ற வகையில் அரசொன்றினை அமைக்குமாறு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியால் கேட்டுக்கொள்ளப்பட்டார். அமைச்சரவை நியமனத்தின்போது, பலதரப்பட்ட பிரச்சினைகள் கிளப்பப்பட்டபோதும் கடைசியில் ரணில் விக்கிரமசிங்கவின் சிபாரிசுக்கமையவே அமைச்சர்களை நியமிக்கவேண்டிய நிலைக்கு ஜனாதிபதி சந்திரிகா உள்ளானார்.

1994இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவி என்ற வகையிலும் பெரும்பாலான மக்களின் ஆதரவைப் பெற்ற கட்சியின் தலைவி என்ற வகையிலும் சந்திரிகாவைப் பிரதமராக நியமிக்கவேண்டிய நிலை அப்போதைய ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவுக்கு ஏற்பட்டது. அதுமட்டுமன்றி, பிரதமர் சந்திரிகாவின் சிபாரிசின் பேரிலேயே அமைச்சர்களும் நியமிக்கப்பட்டனர்.

இதன்படி சிந்தித்துப்பார்க்கும்போது, அரசமைப்பில் எவ்வித அதிகாரங்கள் குறித்து தொகுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அதிகாரங்களைத் தாம் விரும்பியவாறு எவரும் நடைமுறைப்படுத்த இயலாதென்பது புலப்படுகிறது.

ஷிராணி பண்டாரநாயக்காவை மேல்நீதிமன்ற நீதிபதியாக நியமித்தமைக்கு எதிராக மேல்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பு உட்பட்ட வேறு பல வழக்குகளின் தீர்ப்புகளிலும் இருந்து நிறைவேற்று அதிகாரங்கள் என்பது வரையறை அற்றது என்ற கருத்து நிராகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சந்திரிகாவுக்குக் கிடைத்த மக்கள் ஆணையைப் போன்றே, 2001

**தமிழில்: வீயெஸ்ரி**

டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போதும் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் கிடைத்தது.

அதேபோன்று, கடந்த உள்ளூராட்சித் தேர்தல்களின்போது அந்த ஆதரவு மேலும் பெருகி, இன்று நாட்டில் பெரும்பாலான மக்களின் ஆதரவைப் பெற்றுள்ள தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்பதும் ஆதரவைப் பெற்றுள்ள அணி அவரது தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி என்பதும் தெளிவாகத் தெரியவந்துள்ளது.

இன்று நாட்டில் சமாதானத்தை உருவாக்கவும் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தவுமான முயற்சியில் தடைகள் எவையுமின்றி நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்வதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் அமைச்சரவையினதும் நாடாளுமன்றத்தின் பெரும்பாலான உறுப்பினர்களினதும் நோக்கமாகும்.

நாட்டின் எதிர்காலத்துக்கான அவரது நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதியின் முழு ஆதரவு வழங்கப்படாவிட்டால் அல்லது நியாயமான வகையில் செயலாற்ற இயலாத நிலை உருவாக்கப்பட்டால் நாடாளுமன்றத்



தில் அதிக பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பொதுத்தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுக்க அரசு தீர்மானிப்பதைத் தவறான செயலெனக் கருதமுடியாது.

பிரதமரின் சிபாரிசின் பேரில் நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதி இணங்காது போகும் சந்தர்ப்பத்தில் அரசுக்கு இருவேறு மாற்று வழிகள் உள்ளன. அதாவது ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு எதிராக அவர்மீது குற்ற விசாரணைப் பிரேரணையைக் கொண்டு வருவது ஒரு நடவடிக்கை. குற்ற விசாரணைப் பிரேரணை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வேளையில், நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான ஜனாதிபதியின் அதிகாரம் இதனால் செயலற்றுப்போய்விடும்.

அரசினால் மேற்கொள்ளப்படக் கூடிய மற்றைய நடவடிக்கை, எதிர் வரும் வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதிக்குரிய நிதி ஒதுக்கீடு பற்றிய தீர்மானம் மேற்கொள்ளலாகும். அரசமைப்புச் சட்ட விதிகளின்படி ஜனாதிபதிக்குப் பல அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பினும், ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீட்டை நிர்வகிக்கும் அதிகாரம் அரசின் கையில் இருப்பதன் காரணமாக, ஜனாதிபதி அரசை அனுசரிக்காது தான்தோன்றித்தனமாகச் செயற்படமுடியாது என்பது தெளிவாகிறது.

இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் சந்தர்ப்பம் சந்திரிகாவுக்கு உள்ளது. ஆனால், இந்த நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் இன்னும் ஐந்து ஆண்டுகள்வரை உள்ளது.

இதன்படி மக்கள் இறுதியாக ஐ.தே.முன்னணிக்கே ஆணையை வழங்கியுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்தில் எடுக்கும்போது, நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடுமாறு அரசு தெரிவிக்கும் ஆலோசனையை ஏற்று ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடுவது புத்திசாலித்தனமானதும் தூரநோக்குடைய செயலானதுமாக அமையும் என்றே கூறலாம். ▲

# நினைவுப் பேருரை அழைப்பு

யாழ்/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின்



புகழ்பூத்த அதிபரும், பேரறிஞருமாகிய

அமரர்

**உயர்திரு.வீ.சிவசுப்பிரமணியம்**

[B.A, B.Sc, PGT, FRGS, J.P.]

அவர்களின்

6ஆவது

## ஞாபகார்த்த நினைவுப் பேருரை

காலம் : நாளை (06.11.2002) புதன்கிழமை காலை 10 மணி
இடம் : கல்லூரி கந்தையா உபாத்தியார் மண்டபம்
தலைவர் : திரு.க.சிவாஜி அவர்கள்
(முதல்வர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

### நிகழ்ச்சிகள்

★ மங்கள விளக்கேற்றல் : அமரரின் மைந்தன்
Dr.சிவானந்தராஜா அவர்கள்
*(பேரவை உறுப்பினர், யாழ். பல்கலைக்கழகம்)*
★ நினைவு அஞ்சலிப்பா
★ நினைவுப் பேருரை : பேராசிரியர் S.ராஜதுரை அவர்கள
B.Sc. (Agri.), M.Sc. (Agronomy)
(Dean, Faculty of Agriculture, University of Jaffna)
விடயம் : மாணவரின் ஆளுமை அபிவிருத்தி
★ நினைவுரை : திரு.சபா.புஸ்பநாதன்
*(சத்தியப்பிரமாண மொழி பெயர்ப்பாளர்)*
★ நிறைவுரை : திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்
*(முதல்வர், இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்)*

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம**

ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை,
2002.11.01 (10244)

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

# மரண அறிவித்தல்

## திருமதி சங்கரப்பிள்ளை பொன்னம்மா

காரைநகர், இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரான திருமதி சங்கரப்பிள்ளை பொன்னம்மா 03.11.2002 அன்று ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் - ராசம்மா தம்பதியினரின் அன்புமகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சங்கரப்பிள்ளையின் (இளைப பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, கோமளவல்லியின் சகோதரியும், நாகேந்திரம், ரவீந்திரன், சுசீலா, கமலாம்பிகை, புவனேந்திரன், இராஜேஸ்வரி, ஞானாம்பிகை, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவமலர், லலிதாஞ்சலி, பாலச்சந்திரன், சிவஞானம், பத்மாவதி, சண்முகராசா, குலேந்திரன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் காமதேனு, ஜெயசங்கர், வதனி, கோபிகா, பிரியதர்சினி, துஷ்யந்தினி, சரணிகா, கணராஜ், நிர்த்திகா, தர்மலோஜனி, கிருஷாந், நிலஜ்சா, கலைவாணி, ஞானகௌரி, விதுசன், ஐங்கரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2002) செவ்வாய்க்கிழமை காலை10மணியளவில் இல.5,செட்டித்தெரு, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (10275)

*இல.5 செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.* தகவல்:- **பிள்ளைகள்**

# கண்ணீர் அஞ்சலி

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் உப தலைவரான
திரு.க.மயில்வாகனம் அவர்களின் அன்புத் தந்தையார்

## வ.கணபதி

அவர்கள் 03.11.2002 ஞாயிற்றுக்கிழமை காலமான செய்திகேட்டு மனம் வருந்துகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயர்கொண்டுள்ள அவரின் குடும்பத்தினர், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!.....சாந்தி!......சாந்தி!......

*மிஷன் பாடசாலை வீதி,*
*கோண்டாவில்* (10286)

**சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வுக்கல்வி அபிவிருத்தி நிதியமும்.**

# பிறந்தநாள் நினைவில் ஈராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 1968 - 11 - 05



காலனவன் அடியில் 2000 - 10 - 27

## அமரர் திரவியம் விஷியதரன் *(வீசி)*

திதி: 05.11.2002 பிரதமை

ஆறாண்டாகக் கொடிய நோயால் வருந்தி
இறைவன் பாதத்தில் சேர்ந்து - ஈராண்டு
சென்றதையா! ஈரவிழிகள் காயவில்லை!
இன்றுபோல் உள்ளது எம்மைவிட்டுசென்ற நாள்கள்!
மலர்ந்த முகத்துடனும் மாசற்ற நெஞ்சுடனும்
வாராயோ ஒரு முறை? என எண்ணி உற்றார்
உறவினர் உடன்பிறந்தோர்
ஏங்கித் தவிக்கின்றார்கள் - 'வீசி'
எங்குதான் நான் பார்த்தாலும் - உன்
விம்பம் கண் முன் தோன்றுதையா!
வீசி வருவாயோ என்று எண்ணிவாசல் வழிதேடுதையா!
காடுகளில் இனம் பிரிந்த பறவையானேன்!
கருங்கடலில் காற்றடிக்கும் கப்பலானேன்!
அம்மாவுக்கு ஆறுதல் கிடையாது - ஆறவும்
முடியவில்லை! மனம் அமைதியும் இல்லை ஐயா!
உன் ஆத்மா சாந்தியடைய சந்நிதி முருகனை
வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(10224)

தற்போதைய முகவரி: *மருதடி பிள்ளையார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.*
நிரந்தர முகவரி: *நாவற்குழி, கைதடி, நாவற்குழி.*

உன் பிரிவால் வாடும்;
**தாய், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.**

# இரண்டாம் ஆண்டு நினைவில்....



**ஸ்ரீஸ்கந்தராசா தரணிதரன்**
(சட்டத்தரணி)
மண்ணில் உதித்தது: 26.10.1965
விபத்தில் மடிந்தது: 27.10.2000



**திருமதி**
**கனகசபை ஈஸ்வரதேவி**
மண்ணில் உதித்தது: 27.03.1948
விபத்தில் மடிந்தது: 27.10.2000



**செல்வன்**
**கனகசபை உதயகுமார்**
மண்ணில் உதித்தது: 08.11.1967
விபத்தில் மடிந்தது: 29.10.2000



**செல்வன்**
**கனகசபை செந்தூரன்**
மண்ணில் உதித்தது: 27.11.1984
விபத்தில் மடிந்தது: 30.10.2000

*திதி: 05.11.2002*

விபத்தில் உயிர் நீத்த எங்கள் பாச மலர்களே!
ஆறாத் துயரினில் ஆண்டுகள் இரண்டல்ல
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
என்றும் உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மசாந்திக்காய் இறைவனை வேண்டிநிற்கும்:

**ச.ஸ்ரீஸ்கந்தராசா J.P.,**
*திருமால் அச்சகம்,*
*393, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*
தொ.இல.: 021 - 222 5200

~ **குடும்பத்தினர்.**

(10169)

## ஆண்டிறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ.5

யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கான ஆண்டிறுதிப் பரீட்சைகள் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவுறுத்தியுள்ளார். (எ-5)

## யூனியன் கல்லூரி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.5

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் சு.புண்ணியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக வாழ்வகம் பணிப்பாளர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பியும் கலந்து கொள்வர். (எ-5)

## வடமராட்சியில் கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,நவ.5

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களின் நன்மை கருதி வடமராட்சி கிழக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்கத்தினால் இலவச கணனிக் கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த இலவச கணனிக் கற்கை நெறியில் ஜி.சீ.ஈ. சா.த. பரீட்சையில் சித்தியடைந்த இருபாலாரும் இணைந்து கொள்ளலாம் என்றும் -

விண்ணப்பிக்க விரும்புவோர் வடமராட்சி சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சங்க அலுவலகத்திலும், வடமராட்சி தென்னிந்தியத் திருச்சபை வளாகத்திலும் விண்ணப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## பெண்களுடன் சேஷ்டை முயற்சி

தென்மராட்சி,நவ.5

தனித்திருந்த பெண்களுடன் சேஷ்டை விட முயற்சித்ததாகக் கூறப்படும் நபர் அயலவர்கள் வரவே ஓடித் தப்பிய சம்பவம் கடந்த வியாழக் கிழமை இரவு 9.00 மணிக்கு சாவகச்சேரி அஞ்சல்நிலைய வீதியில் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக அருகிலுள்ள இராணுவப் பொலிஸ் முகாமில் முறையிடப்பட்டது. அப்பகுதியில் சப்பாத்து அடையாளங்கள் தென்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-117)

## படையினர் அமைத்த பாதையில் வெள்ளம்

ஊர்காவற்றுறை,நவ.5

வேலணை வங்களாவடி வீதியில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் பொதுமக்கள் பயணஞ்செய்வதற்கென விவசாய நிலங்கள் ஊடாக அமைத்த புதிய வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பொதுமக்கள் அவ்வீதியூடாக பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் வேலணை மத்திய கல்லூரிக்கு மாணவர்கள் வந்து செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஒ-16)

## கைதடி நூலகத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

கைதடி,நவ.5

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளினால் பலத்த சேதமடைந்த நிலையில் காணப்படும் கைதடி பொதுநூலகத்தைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்படி பகுதி மாணவர்களும், பொதுமக்களும் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

பொது நூலகத்தை மீள அமைக்கவோ அல்லது புனரமைக்கவோ சாவகச்சேரி பிரதேச சபை இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் - பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது. (எ-75)

உதயன்

## பேசிக் கொண்டே இருந்தால் போதுமா?

கடந்த ஒகஸ்டில் 16 முதல் 18 வரை தாய்லாந்தின் சட்டாஹிப் நகரிலும் -

செப்ரெம்பர் 31 முதல் இம்மாதம் 3 வரை தாய்லாந்தின் நக்கொன் பத்தொம் நகரிலும் முறையே முதலாவது, இரண்டாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் நடந்து முடிந்துவிட்டன.

இவைபற்றி ஒரு மதிப்பீடு செய்யும்போது அரசும் புலிகளும் பேச்சு நடத்தி, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு நிலையான சமாதானத்தையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்துவது என்பது மிக நீண்ட பாதையில் நெடுந்தூரப் பயணம் என்பது புலனாகிறது.

பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னரே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் இந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தார்கள். அவர்கள் கூறியது இப்போது நிரூபணமாகிவருகிறது.

நோக்கம் அப்படியே இருக்க அதை அடையும் மார்க்கம் மாற்றப்பட்டுவருகிறது.

கண்ணி வெடிகளை அகற்றுதல், உயர் பாதுகாப்பு வலயங்களிலும் மக்கள் சென்று மீள்குடியமர வழிசெய்தல் போன்ற பணிகளுக்கு குழு ஒன்றை நியமிப்பது என்று முதலாவது சுற்றுப் பேச்சுக்களில் முடிவுசெய்யப்பட்டது.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மனிதாபிமானப் பணிகளுக்கு என்று கூட்டுச் செயலணி ஒன்றை ஏற்படுத்துவது என்றும் முதல் சுற்றுப் பேச்சுக்களின்போது தீர்மானிக்கப்பட்டது.

இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களில் அந்த முடிவுகளில் மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. குழுவும், கூட்டுச் செயலணியும், பேச்சுக்களை நடத்தும் அரசு மற்றும் புலிகள் குழுக்களின் உப குழுக்களாக்கப் பட்டுவிட்டன.

இந்த உபகுழுக்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கையிலும் மாற்றம்.

அரசியல் விவகாரங்களைக் கவனிக்க மூன்றாவது உபகுழுவாக அரசியல் உபகுழு ஒன்றை நியமிப்பது என்றும் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களில் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

எதிர்வரும் டிசெம்பர் 2 முதல் 5 வரை நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவிருக்கும் மூன்றாம் சுற்றுப் பேச்சுக்களில் இந்த உபகுழுக்களில் என்னென்ன மாற்றங்கள் செய்யப்படுமோ தெரியாது.

இதில் கவனிக்க வேண்டிய ஒன்று என்னவென்றால், குழு ஒன்றையும் கூட்டுச் செயலணியையும் உருவாக்குவது என்று முதல் சுற்றுப் பேச்சுக்களில் முடிவுசெய்யப்பட்டிருந்த போதிலும், இரண்டாம் சுற்றுப் பேச்சு நடக்கும் வரை அந்தக் குழுவோ, கூட்டுச் செயலணியோ உருவாக்கப்படவில்லை.

இரண்டாம் சுற்றுப் பேச்சில் நியமிப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கும் உப குழுக்களாவது மூன்றாம் சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் நியமிக்கப்படுமா? அல்லது அந்த மூன்று உபகுழுக்கள் விடயத்திலும் மூன்றாம் சுற்றுப் பேச்சுக்களில் மாற்றம் செய்யப்படுமா? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இப்போது அவசரப்பணியாகக் கருதப்படுபவை வடக்கு - கிழக்கில் முழுமையான இயல்பு நிலையை ஏற்படுத்துவது, மக்களின் அன்றாடக் கஷ்டங்களை நீக்குவது, மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர வழிசெய்வது, உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பெரும்பகுதி நிலப்பரப்புக்குள் மக்கள் காலடி வைக்கமுடியாமல் செய்யப்பட்டிருக்கும் நிலையை மாற்றுவது, புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளை உடனடியாக ஆரம்பிப்பது முதலானவை ஆகும்.

அரசியல் தொடர்பான பிரச்சினைகளை அப்புறம் பார்த்தாலும் அவசர மக்கள் பிரச்சினைகளையாவது தீர்ப்பதற்கு உடனடியாகச் செயலில் இறங்க வேண்டாமா?

பேச்சுக்கள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க, மறுபுறத்தில் பணிகள் துரிதமாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கவேண்டும்.

பேச்சுக்கள், விளக்கங்கள், தீர்மானங்கள் எல்லாம் கேட்க நன்றாகத்தான் இருக்கின்றன. அவை விரைவில் செயலுருப்பெற்றால்தானே அவதியுறும் மக்கள் கஷ்டம் நீங்கி ஆறுதல் அடைவார்கள்!

செயல் இல்லாமல் பேச்சுக்கள் மட்டும் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தால் பிரச்சினைகள் தீர்வும் சமாதானம் - சுபீட்சம் ஏற்படவும் ஆண்டுகள் என்ன யுகங்களே செல்லலாம்.

# வேலையற்றோர் எண்ணிக்கை உயர கல்வித் திட்டக் குறைபாடே காரணம்!

## கௌரவிப்பு நிகழ்வில் பேராசிரியர் சத்தியசீலன்

குருநகர்,நவ.5

கல்வித் திட்டத்தில் உள்ள குறைபாடே நாட்டில் வேலையற்றோர் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணம்.

- இவ்வாறு தெரிவித்தார் பேராசிரியர் எஸ்.சத்தியசீலன்.

ஆண்டு 5 புலமைப் பரீட்சைக்கு யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்மூலம் தோற்றி சித்தியடைந்த மாணவ, மாணவிகளின் பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அதிபர், ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு விழா கடந்த சனிக்கிழமையன்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வருடந்தோறும் எமது நாட்டில் நடைபெறும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் தோற்றுகின்றனர். இவர்களில் 12 ஆயிரம் பேரே பல்கலைக்கழகங்களுக்குள் நுழையும் தகுதியைப் பெறுகின்றனர். பல்கலைக்கழகங்களில் பட்டம்பெற்று வெளியேறும் பட்டதாரிகள் பலருக்கு உடனடியாக வேலை வாய்ப்பு கிடைக்காத நிலையே இன்றும் உள்ளது.

ஆனால், வெளிநாடுகளிலுள்ள பட்டதாரிகளில் 60 சதவீதமானோர் பட்டம் பெற்றவுடன் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுவிடுகின்றனர். ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களை பிரபல பாடசாலைகள் தமது பாடசாலைகளுக்கு உள்வாங்குகின்றன. எனினும், இப்பாடசாலையில் சித்தியடைந்த மாணவ, மாணவிகளில் பலர் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடையாத நிலையைப் பிரபல பாடசாலைகளின் பரீட்சைப் பெறுபேறுகளின்மூலம் நாம் அறியக்கூடியதாகவுள்ளது.

ஆனால், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையத் தவறிய பலர் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப்பெற்று பல்கலைக்கழகத்தினுள் நுழைந்து பட்டதாரிகளாக வெளியேறியுள்ளனர்.

எனவே, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ள மாணவர்கள் தொடர்ந்து தமது கல்வியை வளர்க்கவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ்.கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜகோபால், புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின முன்னாள் அதிபர் அருட்செல்வி ஏ.ஜெறோம், கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.புனித யுவானியர் ஆலயப் பங்குத் தந்தை வண.பிதா ஆர்.எம்.ஜி.நேசநாயகம் அடிகள் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். இந்நிகழ்வில், பரீட்சையில் சித்தியடைந்த மாணவ, மாணவிகளின பெற்றோர்களால் இரண்டு கணனிகள் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (எ-51)

## பொதுமக்களுக்கு இடையூறாக போதையில் ரகளை செய்தவருக்கு மீசாலையில் பச்சைமட்டையடி!

தென்மராட்சி,நவ.5

மதுபோதையில் தினமும் பொது மக்களுக்கு இடைஞ்சல் செய்து வந்த நபருக்கு கடந்த வெள்ளிக்கிழமை மாலை பொது மக்கள் முன்னிலையில் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் பச்சைமட்டை அடியைத் தண்டனையாக வழங்கியதாகக் கூறப் படுகிறது.

சம்பந்தப்பட்ட நபர் தினமும் குடித்துவிட்டு வீதியில் தகாத வார்த்தைகளால் போவோர் வருவோரை ஏசிவந்தார். இது தொடர்பாக பொதுமக்கள் கவலையடைந்தனர். இந்த நிலையில், மேற்படி நபரின் தவறான நடத்தையை நேரடியாகக் கண்ணுற்ற இளைஞர்கள் மீசாலை மாவடிப் பிள்ளையார் கோவில் வீதியில் வைத்து பச் சைமட்டையடித் தண்டனையை வழங்கினர்.

இச்சம்பவத்தையடுத்து மது போதையாளர்கள் சத்தமின்றி வீதிகளில் சென்றதாக பொது மக்கள் தெரிவித்தனர். (ஓ-117)

## முதியோர் இல்ல ஊழியருக்கு நிரந்தர நியமனக் கோரிக்கை

கைதடி ,நவ.5

கைதடியில் அமைந்திருக்கும் அரச முதியோர் இல்லத்தில் கடந்த பல வருடங்களாக பரிசாரகர், சுகாதாரத் தொழிலாளிகளாகத் தற்காலிகக் கடமையாற்றிவரும் சுமார் 22 பேர் தமது நிரந்தர நியமனம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி ஊழியர்களில் பலர் 1990ஆம் ஆண்டு தொடக்கம் முதியோர் இல்லத்தில் கடமையாற்றி வருகின்றனர். இவர்கள் தமது நிரந்தர நியமனம் தொடர்பாகப் பல தடவைகள் முதியோர் இல்லப் பொறுப்பதிகாரியிடமும் திருகோணமலையிலுள்ள மாகாண சமூக சேவைத் திணைக்களத்திடமும் கடிதமூலமும், நேரடியாகவும் வேண்டுகோள் விடுத்தனர் என்றும் -

எனினும், இதுவரை உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் - ஊழியர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தாம் வேறு வேலை வாய்ப்புக்கள் கிடைத்தபோதிலும், தற்காலிகக் கடமையை விட்டுச் செல்லவில்லை என்றும் -

இதனால் அரச நியமனம் பெறுவதற்கான வயதெல்லையை இவர்களில் பலர் தாண்டிவிட்டனர் என்றும் - மேலும் கூறப்பட்டது.

முதுமையடைந்த பலருக்கு அவர்களின் இறுதிக்காலத்தில் பல சேவைகளையும், உதவிகளையும் வழங்கும் இவர்கள் தமது நிரந்தர நியமன விவகாரம் ஏன் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது என்றும் - கேள்வி எழுப்பியுள்ளனர்.

வருடந்தோறும் தற்காலிக ஊழியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக அனுப்பி வைக்கப்படும் சுற்றறிக்கைகள் தமது நிரந்தரமான நியமன விவகாரத்தில் பயன்படுத்தப்படவில்லை என்றும் - சம்பந்தப்பட்ட ஊழியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-75)

**நாளை**

ஐப்பசி 20
புதன்கிழமை
(06.11.2002)
திதி :துதியை
முன்னிரவு 11.04 வரை.
நட்சத்திரம்: அனுஷம்
பின்னிரவு 3.30 வரை.
கரிநாள்
சுபநேரம் : 4.35 -6.05
ராகுகாலம் : 12.05 - 1.35
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

வறியவனாக இருப்பது இழிவில்லை; அந்த வறுமையிலிருந்து மீள முயற்சிக்காமல் இருப்பதே இழிவாகும்.

## ஊரெழுப் பாடசாலையில் இரவில் சிலர் நடமாட்டம்!

### அயலவர்கள் முறைப்பாடு

வலி.வடக்கு,நவ.5

ஊரெழுப் பகுதியில் உள்ள பாடசாலையொன்றின் கட்டடத்தை இரவு நேரங்களில் சிலர் தகாத செயல்களுக்குப் பயன்படுத்தி வருவதாக சுற்றாடலிலுள்ள பொதுமக்கள், பாடசாலை அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளனர்.

ஏற்கனவே இப்பாடசாலையில் பல தடவைகள் காவலாளி இருக்கக்கூடியதாகவே கூரை ஓடுகள் கழற்றப்பட்டும், கதவுகள் உடைக்கப்பட்டும் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலைமையிலேயே இப்பாடசாலையில் மீண்டும் இரவு நேரங்களில் சிலர் நடமாடி தகாத செயல்களுக்கு பயன்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது. (ஓ-86)

## கொழும்புத்துறைப் பகுதியில் இராணுவம் வெளியேறியது

கொழும்புத்துறை விபுலானந்தர் வீதியில் மக்கள் குடியிருப்புகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் மாலை அங்கிருந்து முற்றாக வெளியேறினர். அந்தப் பகுதியில் உள்ள 12இற்கும் மேற்பட்ட வீடுகளையும் கிராம உத்தியோகத்தர் முன்னிலையில் உரியவர்களிடம் கையளித்தனர்.

விபுலானந்தர் வீதியில் அமைக்கப்பட்டிருந்த வீதித்தடைகள் அற்றப்பட்டு மக்கள் போக்குவரத்திற்கு வீதி திறந்து விடப்பட்டது.

இந்தப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரை வெளியேற்றி மக்களின் மீள்குடியமர்வுக்கு வழிவகுக்குமாறும், மூடப்பட்டிருக்கும் வீதியைத் திறந்துவிடக் கோரியும் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம், கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றத்தினர் உட்பட பல பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இக்கோரிக்கைகளை அடுத்து அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகள் அடங்கிய குழுவும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் சென்ற வாரம் குறித்த பகுதிக்கு விஜயம் செய்து, சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பகுதியில் படையினர் வெளியேறியதைத் தொடர்ந்து, மக்கள் தமது வீடுகளை சுத்தப்படுத்தி மீளக்குடியமர்வதில் துரிதமாக ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகிறது. (ஓ-30)

## யாழ். மணிக்கூண்டில் 4 கடிகாரங்களும் பழுது!

கொழும்புத்துறை,நவ.5

யாழ். மணிக்கூண்டுக் கோபுரத்தின் அனைத்துக் கடிகாரங்களும் செயலிழந்த நிலையில் தற்போது காணப்படுகின்றன.

யுத்த அனர்த்தத்தால் சேதமடைந்த இந்த மணிக்கூண்டுக் கோபுரம் புனரமைக்கப்பட்டு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் விமரிசையாகத் திறந்துவைக்கப்பட்டது. திறப்புவிழா அன்றே வேம்படிச் சந்தி பக்கமாக பொருத்தப்பட்டிருந்த கடிகாரம் பழுதடைந்தது. அதன் பாகங்கள் திருத்தங்களுக்காக சீனாவுக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் படிப்படியாக மத்திய கல்லூரி மைதானப் பக்க கடிகாரமும், புல்லுக்குளப் பக்கமிருந்த கடிகாரமும் வெவ்வேறு நேரங்களைக் காட்டி செயலிழந்திருந்தன.

இறுதியாக கடந்த சில வாரங்களாக மணிக்கூட்டுக் கோபுர வீதிப் பக்கமிருந்த கடிகாரம் மட்டும் இயங்கிவந்தது.

தற்போது அதுவும் இயங்கவில்லை.

சீனத் தயாரிப்பான இக்கடிகாரம் பிரிட்டிஷ் அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்டு புனரமைக்கப்பட்ட மணிக்கூண்டுக் கோபுரத்தில் பொருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ஓ-30)

## உதவுவதில் தாமதமாம்!

தென்மராட்சி,நவ.5

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு உதவிகள் வழங்குவதாக பொது அமைப்புகள் தெரிவிக்கின்றபோதிலும் அவற்றினை வழங்குவதில் காலதாமதம் செய்வதால் ஆஸ்பத்திரி வார்டுகளை திறக்கமுடியாதுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் உமா சிவபாதசுந்தரம் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரி வார்டுகள் திறக்கக்கூடிய நிலையிலுள்ள போதிலும், இவற்றுக்குத் தேவையான குடிதண்ணீர் வழங்குவதற்கு நீரிறைக்கும் இயந்திரம் இல்லாததாலும், அம்புலன்ஸ் விடுவதற்கான கொட்டில் வேலைகள் இன்னமும் பூர்த்தி செய்யப்படாததாலும், கட்டில்களுக்கு தேவையான பலகைகளும், மெத்தைகளும் இல்லாததாலும் வார்டுகள் திறப்பதில் தாமதம் ஏற்படுவதாகவும் - அவர் தெரிவித்தார். (ஓ-117)

## சீரற்ற மின் விநியோகம்

கோப்பாய்,நவ.5

கோப்பாய் மத்தி, வடக்கு பகுதிகளுக்கு விநியோகிக்கப்படும் மின்சார வலுவில் வேறுபாடு நிலவுவதாக பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியிலேயே ஒரு பகுதிக்கு அதிக வலு மின்சாரமும் மற்றொரு பகுதிக்கு வலுக்குறைந்த மின்சாரமும் விநியோகிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. (ஒ-72)

# தற்காலிக கொட்டகை அமைக்க நிதியுதவி

செம்பியன்பற்று,நவ.5

வடமராட்சி கிழக்கிலுள்ள மூன்று பாடசாலைகளுக்கு தலா ஒரு லட்சத்து பதினையாயிரம் ரூபா பெறுமதியான தற்காலிக கொட்டகைகள் அமைத்து வழங்குவதற்கு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் முன்வந்துள்ளது.

கட்டைக்காடு றோ.க.த. பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்., ஆழியவளை சி.சி.த. பாடசாலை ஆகியவற்றிற்கே இவ்வாறு கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (எ-36)


J/MANIPAY HINDU COLLEGE

MANIPAY

ANNUAL PRIZE GIVING

06-11-2002

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி

மாணவர்திறன் நயப்பு வைபவம்

(பரிசளிப்புநாள்)

காலம் :- 06.11.2002 புதன்கிழமை பி.ப. 3.00மணி

இடம் :- கல்லூரி மண்டபம்

தலைவர்

திரு.கு.சண்முகநாதன் B.Ed, M.A. (Ed) (அதிபர்)

முதன்மை விருந்தினர்

திருமிகு செ.சந்திரசேகரம் M.A. (Econ)

(விரிவுரையாளர், பொருளியல்துறை, பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)

பரிசில் வழங்கல்

திருமதி சுரேஜினி சந்திரசேகரம் B.B.A.

(பிரதம கணக்காளர், பிரதேச செயலகம், வவுனியா)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள்

(C/24699)


## மீள்குடியமர்வு கொடுப்பனவு

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்குவதற்கென நாற்பது லட்சம் ரூபா கிடைத்துள்ளதாகவும் -

ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 15 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் - அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-36)


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

05-11-2002



செல்வி மதுமிதா

லண்டனில் வசிக்கும் மதுசர்ராஜ் - பிறேமி தம்பதிகளின் செல்வப்புதல்வி

செல்வி மதுமிதா

தனது முதலாவது பிறந்தநாளை லண்டனில் கொண்டாடுகின்றார். இவரை லண்டனில் வசிக்கும் அப்பா, அம்மா, மாமா, சித்தப்பா, சித்தி மற்றும் வல்வெட்டியில் வசிக்கும் அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமி, மாமாமார், பாட்டி. நீர்வேலியில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, சித்தி, சித்தப்பா, அக்கா, அண்ணா அனைவரும் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

வல்வெட்டி. (10187) சி.ராஜ்குமார்.



மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 - 10 - 1920



மறைவு 22 - 01 - 1999

சின்னப்பா பொன்னுத்துரை

மூன்றாண்டுகள் முடிவுற்றாலும் உம்
நினைவும் முகமும் மறைந்திடாது!
இருக்கும் வரை இதயம் நினைக்கும்:

மனைவி, மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பலாலி வீதி, உரும்பிராய்.

(10230)

மலர்வு 30 - 06 - 1958



உதிர்வு 28 - 10 - 2000

திருமதி ஜெயமலர் தருமபாலன் (தங்கம்)

திதி: 05.11.2002

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்ததம்மா
ஆறாது எம் துயரம் எம் கவலை
உயிர் உள்ள வரையும் உன்
நினைவோடு வாழும் அம்மா

திருமதி நவமணி பொன்னுத்துரை.



தாய்லாந்துப் பேச்சுக்களும் பிரபா மீதான தண்டனையும்

திருமலைக் கடலில் கைதுச் சம்பவம்: சமாதான நகர்வில் புதிய வினை

சமாதானத்துக்கு எதிரான தூண்டல்களும் மக்கள் மனங்களில் விஷ விதைப்புகளும் – நேரடி

மாளிகாவத்தையை அதிரவைத்த இன வன்செயல்கள்




புலிகளிடம் சரணடையும் சிப்பாய்கள் படைத்தரப்பு சந்திக்கும் புதிய சவால் – வடபுலம்

மனித இறைச்சி க்ஹைம் டயரி

தீபாவளி ஜோக்ஸ்

ஹோட்டல் நடத்திய நகைச்சுவை விருந்து

மற்றும் இணையத்தளங்களிலிருந்து, பித்தன் பதில்கள், இலவச மருத்துவ ஆலோசனை, சினிமா, விளையாட்டு, மசாலா மிக்ஸ் உட்பட இன்னும் பல அம்சங்கள்.

05-11-2002 இதழில்

சுடர் ஒளி

விலை -14/-

(C/24705)

# ஆசிரியர்கள் வேலைக்கு வராவிட்டால் மாணவர்களே சத்தியாக்கிரகம் செய்யுங்கள்!

## ஜனாதிபதியின் அறிவுறுத்தல் இது

கொழும்பு,நவ.5

ஆசிரியர்கள் உரிய நேரத்துக்குப் பாடசாலைக்கு வராவிட்டால், கற்பிக்க வகுப்புக்கு வராவிடின் மாணவர்கள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடவேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுகின்றார்.

கண்டி தர்மராஜ கல்லூரியில் நடைபெற்ற ஒரு விழாவில் உரையாற்றுகையில் இதைக்கூறிய ஜனாதிபதி "இன்றேல் பொலீஸில் முறையிடுங்கள். ஆசிரியர்கள் உங்களுக்குத் தொல்லை தந்தால் நான் பார்த்துக் கொள்கின்றேன்" எனவும் சொன்னார்.

ஜனாதிபதி அங்கு மேலும் கூறியதாவது:-

பிரதேச செயலர் அலுவலகத்தில், அலுவல்கள் நடைபெறாவிடின் அந்த அலுவலகம் எதிரே சத்தியாக்கிரகம் செய்யுங்கள். லஞ்சம் வழங்காவிடின் அரச அலுவலகங்களில் 75 சதவீதமான ஊழியர்கள் ஒரு கோவையைக் கூட நகர்த்தமாட்டார்கள்.

ஜே.வி.பியும் அரசும் பின்னர் புலிகள் இயக்கமும் கொலைகளைப் புரிந்தன. பிரபாகரன் என்பின்னால் விரட்டாமல் இருந்தால் நான் அந்த இடங்கள் எல்லாவற்றுக்கும் சென்று அலுவல் பார்க்கமுடியும்.

தனியார் ஊடகங்களில் என்னைபோன்று ஏச்சுப் பேச்சு வாங்கும் வேறு ஒரு தலைவர் உலகில் இருக்கமாட்டார். இன்று ஊடகங்கள் பச்சைப் பொய்களைக் கூறுகின்றன.



- இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# விவசாய ஓய்வூதியத் திட்டத்துக்கு தீவகத்தில் ஆதரவில்லையே!

## கமநல அதிகாரி கவலை

ஊர்காவற்றுறை,நவ.5

தீவுப்பகுதியில் மிகக்குறைந்த எண்ணிக்கையான விவசாயிகளே, விவசாயிகள் ஓய்வூதிய சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தில் இணைந்து கொண்டுள்ளதாக வேலணை கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் கவலை வெளியிட்டுள்ளார்.

விவசாயிகளுக்கென பல்வேறு நலன்களை உள்ளடக்கிய மேற்படி திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் விவசாயிகளை வேலணை கமநல கேந்திர நிலையத்தில் அதற்கான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாமென அவர் தெரிவித்தார்.

18 வயது தொடக்கம் 59 வயதுக்குட்பட்ட இருபாலாரும் மேற்படி திட்டத்தில் இணைந்துகொள்ள முடியும். அவர்கள் தமது 60 வயது முதல் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொள்பவருக்கு பூரண உடலியலாமை ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் ஆகக்கூடியதாக 50 ஆயிரம் ரூபா வரையிலும், நிரந்தர பகுதியளவிலான உடலியலாமை நிலைக்கு உட்படும்போது ஆகக்கூடியது 25 ஆயிரம் ரூபா வரையிலும் பெறமுடியும்.

அதேவேளை, ஓய்வூதியம் பெற முன்னதாக அங்கத்தவர் மரணமடைய நேரிட்டால் ஆகக்கூடியது 25 ஆயிரம் ரூபாவரையிலான மரணப் பணிக்கொடை வழங்கப்படும்.

நெல் உட்பட தானிய வகைகள், உப உணவுப் பயிர்கள், மரக்கறி கிழங்குவகைகள், பழங்கள், வெற்றிலை அல்லது கரும்பு பயிரிடும் விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-16)

# தாதிய பயிற்சி ஆள்சேர்ப்பில் குளறுபடி என முறைப்பாடு

தென்மராட்சி,நவ.5

சுகாதாரத் திணைக்களத்தினால் கடந்த மே மாதம் நடத்தப்பட்ட பயிற்சி தாதிய உத்தியோகத்தர் ஆள் சேர்ப்புக்கான நேர்முகப்பரீட்சையில் தெரிவான பரீட்சார்த்திகளின் பெயர்கள் சமீபத்தில் வெளியிடப்பட்ட, இது குறித்த பட்டியலில் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தினால் கடந்த ஓகஸ்ட்மாதம் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்களே பட்டியலில் வெளியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மே மாதம் நேர்முகப்பரீட்சை நடைபெற்ற பின்னர் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல்கள் வடகுக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது தடவை விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது முதலாவது நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட பலர் இதனால் மறுபடியும் விண்ணப்பிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் தற்போது வெளியாகியபோதே முதலாவது நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களின பெயர்கள் தேர்வுசெய்யப்படவில்லை என்பது தெரியவந்ததாக பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் கூறப்படு கின்றது.

பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கு முன்னர் பாதிக்கப்பட்ட 76 பேருக்கும் பயிற்சியில் கலந்துகொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. (ஒ-117)

# மாதாந்தக் கூட்டத் தீர்மானங்கள் டிசெம்பருக்குள் அமுலாக வேண்டும்!

## யாழ்.மேயர் மாநகர அதிகாரிகளுக்கு உத்தரவு

யாழ்ப்பாணம்,நவ.5

யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டங்களில் இந்த வருடம் நிறைவேற்றப்பட்ட அனைத்துத் தீர்மானங்களும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

- இவ்வாறு யாழ் மேயர் செகந்தையன் மாநகரசபைத் திணைக்கள அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

சமீபத்தில் இடம்பெற்ற யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்திலேயே யாழ்நகர முதல்வர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். அங்கு உரையாற்றியபோது அவர் மேலும் கூறியதாவது:-

"எமது சபையால் இந்த வருடம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஏராளமானவை இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. பொருளாதாரநிலை மற்றும் வசதியீனங்கள் இதற்குக் காரணமாகும்.

"ஆயினும், எமது எல்லைக்குட்பட்ட மக்களின் அபிவிருத்தி தொடர்பாக நாம் அதிக கவனம் எடுத்துச்செயலாற்ற வேண்டியது அவசியமாகும்" - என்றார்.

சபை விவாதத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய ஈ.பி.ஆர். எல்எவ்வரதர் அணி உறுப்பினர் மனுவல் மங்களநேசன் கூறியதாவது:-

"மக்களுடைய தேவைகளுக்கும் விருப்புகளுககுமேற்பவே நாம் சபையில் தீர்மானங்களைக் கொண்டு வருகின்றோம். சபை உப விதிகளைக் காரணங்காட்டி அவற்றை நடைமுறைபடுத்துவதில் காலந்தாழ்த்துவதை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. சபையினால் உருவாக்கப்பட்ட விதிகள் சபையின் செயற்பாடுகளுக்கு இடையூறாக அமைவது ஆரோக்கியமானதல்ல" - என்றார்.

புளொட் சார்பிலான சபை உறுப்பினர் செபஸ்ரியன் இருதயராஜன் கூறுகையில்:-

"மாநகரசபையின் வேலைத் திட்டங்களை துரித கதியில் நிறைவேற்றுவதில் அக்கறை செலுத்தப்பட வேண்டும்" - என்றார்.

புளொட் அமைப்பின் சார்பிலான சபை உறுப்பினர் மு.தவநாதன் கூறுகையில்:-

"அண்மையில் பத்திரிகை ஒன்றில் பிரதி மேயர் எனக் குறிப்பிட்டு சபை உறுப்பினர் என்.அரவிந்தனின் பெயரும் புகைப்படமும் பிரசுரமாகியிருந்தது. அவர் உண்மையில் பிரதி மேயரா? அல்லது பிரதிமேயராக யாராவது நியமிக்கப்பட்டுள்ளார்களா? என்பதை சபை எமக்குத் தெளிவுபடுத்தவேண்டும்" - என்றார்.

ஈ.பி.டி.பியின் சார்பிலான சபை உறுப்பினர் குல் முகம்மது கமால் தீன் கூறுகையில்:-

"மேயர் தனது கடமைகளை இடையூறின்றி மேற்கொள்ளும் வகையில் அவருக்குத் தனியான காரியாலயம் அமைக்கப்படவேண்டும்" - எனக் குறிப்பிட்டார்.

விவாதம் தொடர்பான விளக்கவுரையில் மேயர் கூறியதாவது:-

"எமது கட்சி யாரையும் பிரதி மேயராக நியமிக்கவில்லை. பிரதிமேயர் ஒருவரை நியமிக்குமாறு எமது தலைமைப் பீடத்திடம் பல தடவை வேண்டுகோள்விடுக்கப்பட்ட போதிலும், இதுவரை எவரும் அப்பதவிக்கு நியமிக்கப்படவில்லை" - என்றார். (வ-9)

# பல்கலை. அனுமதி விவகாரம்: விவரம் சமர்ப்பிக்கப் பணிப்பு

கொழும்பு,நவ.5

அமைச்சரவையால் இசற் புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட்ட 222 மாணவர்களின விவரங்களை சமர்ப்பிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த உத்தரவினை அமைச்சரவைச் செயலாளருக்கு உயர்நீதிமன்றம் அனுப்பி வைத்துள்ளது.

6 மாணவர்களால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுப்பினர்கள் உட்பட 28 பேர் பிரதிவாதிகளாக இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

2001 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 222 மாணவர்களுக்கே அமைச்சரவை பல்கலைக்கழக அனுமதி வழங்க சிபாரிசு செய்திருந்தது.

இந்த சிபாரிசினை எதிர்த்தே அடிப்படை மனித உரிமைமீறல் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஒ-12)

# அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவும் பூரண சேவையை வழங்குவதில்லை!

## தொண்டு அமைப்புக்களின் கூட்டத்தில் கவலை

பெரும்பாலான அரசசார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கு பூரண சேவையை வழங்குவதில்லை. அவை பெயரளவிலேயே இயங்குகின்றன.

- இவ்வாறு அபிவிருத்திக்கான சமூக நிறுவனங்களின் கூட்டமைப்பின் நிர்வாக இயக்குநர் ச.செந்துராசா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற தொண்டு நிறுவனங்களின் கூட்டத்தில கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

அரச சார்பற்ற சமூக நிறுவனங்கள் பல மக்களின் சேவைக்கென இயங்குகின்றன. ஆயினும், அவற்றில பலவும் மக்களுக்கான பூரண சேவையை வழங்குவதில்லை; பெயரளவிலேயே இயங்குகின்றன.

உண்மையில் மக்களுக்கு சேவை செய்யும் எண்ணத்துடன் அரச சார்பற்ற, சமூக சேவை நிறுவனங்கள் செயற்படுமானால் அவற்றிக்கு வேண்டிய நிதி உதவிகளை உலக நாடுகளிலிருந்து பெற்றுக்கொடுக்கமுடியும்.

இன்று பல சமூக நிறுவனங்களும் செயற்பாடுகள் இன்றி முடங்கிக் கிடக்கின்றன. காரணம் கேட்டால் நிதிப் பற்றாக்குறை என்கின்றனர். உண்மையில் சமூக சேவையில் ஆர்வம் இருந்தால் - ஆர்வமுள்ளவர்களால் சமூக நிறுவனங்கள் நடத்தப்படுமானால் - ஏதோ ஒரு வகையில் அந்த நிறுவனங்கள் இயங்கிக் கொண்டே இருக்கும்.

அத்தகைய சேவை எண்ணம் கொண்ட நிறுவனங்களுக்கே நாம் உதவி புரியவும் எண்ணியுள்ளோம். வெளிநாட்டு உதவிகளை அப்படியான செயற்பாடுள்ள, விடாமுயற்சியுள்ள சமூக நிறுவனங்களுக்கு வழங்குவதன் மூலம் அவை உரிய முறையில் சமூகத்தைச் சென்றடையும்; மக்களும் இதன்மூலம் பயன்பெறுவார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல அரசசார்பற்ற சமூக நிறுவனங்களும் எமது அமைப்பில் பதிவுசெய்து எமது உதவிகளைப் பெற்று அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும்.

எமது அபிவிருத்திக்கான சமூக நிறுவனங்களின் கூட்டமைப்பில் இது வரை தமிழ் பிரதேசங்களில் இயங்கும் நூற்றுக்கும் அதிகமான நிறுவனங்கள் பதிவுசெய்யப்பட்டு செயற்படுகின்றன.

கல்வி, சுகாதாரம், குடியேற்றம் முதலான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும் செய்யப்படவேண்டியுள்ள நிலையில் தன்னலமற்ற சேவையாளர்கள் மக்கள் மத்தியில் பொது நிறுவனங்களினூடாக செயற்படவேண்டும்.

கடந்த ஆண்டில் பலகோடி ரூபா உரிய முறையில் செலவழிக்கப்படாது எஞ்சியது. இதேபோல் கடந்த காலங்களில் நம்பிக்கைக்குரிய நிறுவனங்களின் செயற்பாடுகள் இன்மையால் பல லட்சம் அமெரிக்க டொலர்கள் தேங்கிக்கிடக்கின்றன.

அவற்றை செலவு செய்ய நாம் தயார். ஆனால், மக்களுக்காக சேவையாற்றுவதுடன் புதிய திட்டங்களையும் நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் தேவை. எமக்குத் தேவையான நேரங்களில் கணக்கறிக்கைகளையும் சமர்ப்பிக்கத் தயாராக அந்த நிறுவனங்கள் இருக்கவேண்டும் என்றார் அவர். (ஒ-12)

### குறியீட்டுநாடக நிகழ்வு

வன்னியிலிருந்து சமாதானப் பயணம் மேற்கொண்டுள்ள தமிழீழ கலைக்கல்லூரி மாணவர்கள "இரத்த நதியில் பூத்த வெள்ளை ரோஜாக்கள்" என்னும் தற்கால சமாதான நிலையை வெளிப்படுத்தும் குறியீட்டு நாடகத்தினை தற்போது குடாநாட்டின் பல பகுதிகளிலும் நிகழ்த்தி வருகின்றனர். (ஒ-73)

# உலக இந்து மாநாட்டுக்கு ஒருகோடி ரூபா ஒதுக்கீடு

## ஆலோசனைக் கூட்டத்தில் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.5

உலகில் வாழும் 93 கோடி இந்துக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும்வகையில் இரண்டாவது உலக இந்து மாநாடு அடுத்த ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம திகதி வரையும் கொழும்பில் நடைபெறவுள்ளது.

மேற்படி மாநாடு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ தலைமையில் நடைபெற்ற பொழுது இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

மாநாட்டுக்கென அரசு ஒருகோடி ரூபாவை வழங்கியுள்ளதாக இந்து கலாசார அமைச்சின் ஆலோசகர் ஆர். பேரின்பநாயகம் இந்தக் கூட்டத்தில் தெரிவித்தார். மாநாடு மே மாதம் 2 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகித் தொடர்ந்து நான்கு நாள்கள் நடைபெறும் என்றும் -

இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவாச்சாரியார்களுக்கும் அந்தணப் பெருமக்களுக்கும் முக்கிய இடம் வழங்கப்படும் என்றும் - அவர் மேலும தெரிவித்தார்.

மாநாட்டையொட்டி மிகப்பெரியளவில் புத்தகக் கண்காட்சியும் நடத்தப்படவுள்ளது. அத்துடன், இரண்டு மலர்களும் வெளியீடு செய்யப்படவுள்ளன. இவற்றில் ஒன்று மாநாடு தொடர்பானது; மற்றையது ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கியது.

மாநாட்டில் கலந்து கொள்வதற்கென இந்தியா உட்பட பல நாடுகளில் இருந்தும் அறிஞர்கள் பலர் வருகை தரவுள்ளனர். இந்த மாநாட்டைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலும் ஒரு மாநாட்டை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் இந்து கலாசார அமைச்சின் பிரதிநிதிகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், சமயப் பிரமுகர்கள், இந்து சமய ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-10)

# பளைப் பிரதேசத்தில் டெங்கு பரவும் அபாயம்!

தென்மராட்சி,நவ.5

பளைப்பிரதேசத்தில் டெங்கு காய்ச்சல் பரப்பும் நுளம்புகள் காணப்படுவதாக, அப்பகுதியில் நுளம்புகள் பற்றி ஆய்வுகள் நடத்திய சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் இந்த ஆய்வினை மேற்கொண்டதாகவும் -

ஆய்வு நடத்திய இடங்களில் மலேரியா பரப்பும் நுளம்புகள் அதிகளவு காணப்படுவதாகவும் -

சில இடங்களில் டெங்கு நுளம்புகள் காணப்படுவதாகவும் - அவர்கள தெரிவித்தனர்.

காய்ச்சல் அறிகுறி காணப்படுவோர் உடனடியாக ஆஸ்பத்திரிகளில் இரத்த பரிசோதனை செய்துகொள்ளுமாறு தெரிவித்தனர். (ஒ-117)

# படங்களைப் பயன்படுத்தினால் எமக்குப் பணம் தரவேண்டும்!

## இந்திய வீரர்கள் ஐ.சி.சியிடம் கோரிக்கை

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின்போது தமது படங்களை விளம்பரங்களில் பயன்படுத்தினால் ஐ.சி.சி. எனப்படும் சர்வதேச கிரிக்கெட் சபை தமக்குப் பணம் தரவேண்டும் என இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் கோரியுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊடாகத் தமது கோரிக்கையை இந்திய வீரர்கள் விடுத்துள்ளனர். இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை ஐ.சி.சியிற்குக் கடிதம் அனுப்பியுள்ளது. அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஐ.சி.சி. சம்பியன் கிண்ணப் போட்டிகளின்போது வீரர்களின் வர்த்தக ஒப்பந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

'சுற்றுப்போட்டி ஆரம்பமாவதற்கு ஒரு மாதத்துக்கு முன் ஒரு மாதகாலமும் போட்டிகள் முடிவடைந்து ஒரு மாதகாலமும் ஐ.சி.சியின் அனுசரணையாளருக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விளம்பரங்களில் வீரர்கள் தோன்றக்கூடாது.

அத்துடன், அனுசரணையாளர்கள் 6 மாதகாலத்துக்கு வீரர்களின் படங்களை இலவசமாகத் தமது விளம்பரங்களுக்குப் பயன்படுத்தலாம்.'

- இவ்வாறு ஐ.சி.சி.கூறியது. இந் நிபந்தனையை ஏற்க மறுத்த இந்திய வீரர்கள் போட்டிகளில் பங்குபற்றுவார்களா என்பது சந்தேகத்திற்கு இடமாக விருந்தது.

எனினும், போட்டிகளின் ஒருமாத கால நிபந்தனையை 17 நாள்களாகக் குறைப்பதற்கு ஐ.சி.சி. இணங்கியது. அனுசரணையாளர்கள் 6 மாதகாலம் வீரர்களின் படங்களை இலவசமாகப் பயன்படுத்தலாம் என்ற விடயமும் நீக்கப்பட்டது. இதனையடுத்து இந்திய சிரேஷ்ட வீரர்கள் போட்டிகளில் பங்குபற்றச் சம்மதித்தனர்.

இதேவேளை, உலகக் கிண்ணப் போட்டிகளின்போதும் ஒப்பந்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையிலேயே இந்திய வீரர்கள் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர்.

"எமது புகைப்படம் மற்றும் வீடியோப் படங்களை ஐ.சி.சி. விளம்பரங்களுக்குப் பயன்படுத்தும் உரிமை 2 மாத காலத்துக்கு மட்டுப்படுத்தப்படவேண்டும். மேலும் இதற்காக வீரர்களுக்குப் பணம்தரவேண்டும்."

- இவ்வாறு இந்திய வீரர்கள் கோரியுள்ளனர்.

# வீனஸ், செரீனாவின் பெற்றோர் விவாகரத்து

உலகின் புகழ்பெற்ற நட்சத்திர டென்னிஸ் வீராங்கனைகளான வீனஸ், செரீனா வில்லியம்ஸ் ஆகியோரின் பெற்றோர் விவாகரத்துச் செய்துள்ளனர்.

இச்சகோதரிகளின் தந்தை ரிச்சர்ட் வில்லியம்ஸ், தாய் ஒரேசென் வில்லியம்ஸ் ஆகிய இருவரும் 1980 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர்.

20 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்த அவர்கள், விவாகரத்துச் செய்து கொள்ளத் தீர்மானித்தார்கள். இதையடுத்து, கடந்த 18 மாத காலமாக இருவரும் தனித்தனியாக வாழ்ந்து வந்தனர். புளோரிடா மாநில நீதிமன்றத்தில் அவர்களுடைய விவாகரத்து வழக்கு நடைபெற்றது. இவ் வழக்கின் தீர்ப்பு கடந்த செவ்வாய்க் கிழமை அளிக்கப்பட்டது.

விவாகரத்தை ஊர்ஜிதம் செய்தது நீதிமன்றம். ஆனால், அவர்களுக்கிடையே சொத்துக்கள் எவ்வாறு பிரித்துக் கொள்ளப்பட்டன என்ற விவரத்தை வெளியிடவில்லை.

ரிச்சர்ட்டும் ஒரேசென்னும் தமது மகள்களின் டென்னிஸ் வாழ்க்கை மீது அதிகமான ஆர்வம் கொண்டிருந்தனர்.

வீனஸ், செரீனா ஆகியோரின் பயிற்றுநராகவும் ரிச்சர்ட்ஸ் வில்லியம்ஸ் விளங்குகிறார்.

வில்லியம்ஸ் சகோதரிகள் இருவரும் தலா 4 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று உலகின் முன்னிலை வீராங்கனைகளாகத் திகழ்கின்றனர்.

மகளிர் டென்னிஸ் வீராங்கனைகளின் தரவரிசையில் செரீனா வில்லியம்ஸ் உலகின் முதல் நிலையில் உள்ளார். (ம)

# 'ஹொங்கொங் சிக்ஸஸ்' போட்டியில் பாகிஸ்தான் அணி சம்பியனானது

"ஹொங்கொங் சிக்ஸஸ்' கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பாகிஸ்தான் அணி மீண்டும் சம்பியனாகியுள்ளது.

அணிக்கு தலா அறுவர் கொண்ட இப்போட்டி கடந்த 2ஆம், 3ஆம் திகதிகளில் ஹொங்கொங்கில் இடம்பெற்றது.

இறுதிப்போட்டியில் மொயின்ஹான் தலைமையிலான பாகிஸ்தான் அணி இங்கிலாந்து அணியை 3 விக்கெட்டுகளால் தோற்கடித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 81 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 2 விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந்தது.

கடந்த வருடம் நடைபெற்ற சுற்றுப்போட்டியில் பாகிஸ்தான் அணி தென்னாபிரிக்காவை வெற்றி கொண்டு சம்பியனாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை இந்திய அணியுடனான போட்டி ஒன்றில் பாகிஸ்தான் 11 ஓட்டங்களால் வெற்றிகொண்டமை குறிப்பிடத்தக்கது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 3 விக்கெட் இழப்பிற்கு 93 ஓட்டங்களைப் பெற்றது. இந்திய அணி 82 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இத்தொடரின் மூன்றாம் இடத்திற்காக நடத்தப்பட்ட போட்டியில் ரொபின்சிங் தலைமையிலான இந்திய அணி தென்னாபிரிக்காவை 4 விக்கெட்டுக்களால் வெற்றிகொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 85 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பொஸ்னாம் 31 ஓட்டங்களைப் பெற்றார். அந்த அணி வீரர் ஜெரால்ட் ட்ரொஜ் 7 பந்துகளில் 5 சிக்ஸர் உட்பட 32 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, அணியின் தலைவர் ரொபின் சிங்கும் துடுப்பாட்டத்தால் வெற்றி இலக்கை அடைந்து கொண்டது. இவர் தொடர்ச்சியான 4 பந்து வீச்சுக்களில் சிக்ஸர் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்திய அணியின் இறுதி ஓவரில் இந்திய அணிக்கு 20 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இந்த இறுதி ஓவரில் ரொபின்சிங் மூன்று சிக்ஸர்களை அடித்து தனது அணியின் வெற்றிக்கு வழி கோலினார்.

# சார்க் உதைபந்தாட்டப் போட்டிகளில் ஆப்கான்?

சார்க் தங்கக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் ஆப்கானிஸ்தானையும் சேர்த்துக்கொள்ளுமாறு ஆசிய உதைபந்தாட்டக் கூட்டுச் சம்மேளனம் (ஏ.எவ்.சி.) சிபாரிசு செய்துள்ளது.

ஆசிய உதைபந்தாட்டக் கூட்டுச் சம்மேளனத்தின் இத்தீர்மானம் தொடர்பாக அதன் உபதலைவர்களில் ஒருவரான மனிலால் பெர்னாண்டோ சார்க் நாடுகளின் உதைபந்தாட்டச் சம்மேளனங்களுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இப்போட்டிகளில் ஆப்கானிஸ்தானைச் சேர்ப்பது முன்னேற்றகரமான ஒரு நடவடிக்கையாக அமையும் என்று மனிலால் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

தலிபான் இயக்கத்தின் ஆட்சி முடிவுற்றபின் ஆப்கானிஸ்தான் ஆசிய உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் மீண்டும் இணைந்துகொண்டது. அண்மையில் தென்கொரியாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவிலும் ஆப்கானிஸ்தான் பங்குபற்றியது.

சார்க் தங்கக் கிண்ண உதைப் பந்தாட்டப் போட்டிகள் இவ்வருட ஆரம்பத்தில் பங்களாதேஷில் நடைபெறவிருந்தன.

ஆனால், பங்களாதேஷ் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் நிர்வாகிகளைப் பதவிநீக்கம் செய்தமை காரணமாக அந்நாட்டு உதைபந்தாட்டச் சம்மேளனத்திற்குச் சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் தடைவிதித்தது. இதனால், திட்டமிட்டபடி போட்டிகள் நடைபெறவில்லை.

எனினும், பின்னர் இத்தடை நீக்கப்பட்டது. இதையடுத்து அடுத்த வருடம் சார்க் தங்கக் கிண்ணப் போட்டிகளை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (ஒ)

# விளையாட்டு

ஐ.சி.சியின் அனுசரணையாளர் பட்டியலை உலகக் கிண்ணப்போட்டிகள் ஆரம்பமாவதற்கு 6 மாதத்துக்கு முன்பே வெளியிடுமாறும் வீரர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை, வீரர்களுடனான ஒப்பந்த நிபந்தனைகள் குறித்து இம்மாத இறுதியில் ஐ.சி.சி. மறுபரிசீலனை செய்யவுள்ளது. இதற்காக ஐந்து பேர் கொண்ட குழு ஒன்றை ஐ.சி.சி. நியமிக்கவுள்ளது. (ஒ)

# ஸிம்பாப்வே அணிக்கு கம்பெல் தலைவர்

ஸிம்பாப்வே கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக அலிஸ்டர் கம்பல் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவ்வணியின் தலைவராகப் பதவி வகித்த ஹீத் ஸ்ரீச், ஐ.சி.சி.சாம்பியன் போட்டிகளின் பின்னர் கொழும்பில் நடைபெற்ற வாகன விபத்தொன்றில் காயமடைந்தார். அதனால், பாகிஸ்தான் அணியுடனான போட்டிகளுக்கு ஸ்ரீக் சேர்க்கப்படவில்லை.

அவருக்குப் பதிலாகவே கம்பெல் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். 1996முதல் 3 வருடங்கள் ஸிம்பாப்வே அணியின் தலைவராக விளங்கியவர் இவர். தொடர்ச்சியான தோல்விகளின் காரணமாகவும் தனது துடுப்பாட்டம் பலவீனமடைந்தமை காரணமாகவும் பின்னர் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தார்.

பாகிஸ்தானுடனான முதலாவது டெஸ்ட் போட்டிக்காக 18 பேர் கொண்ட குழாமொன்றை ஸிம்பாப்வே கிரிக்கெட் சபை தெரிவுசெய்துள்ளது.

வீரர்கள் விவரம்: அலிஸ்டயர் கம்பெல், அன்டி ஃபிளவர், கிரான்ட் ஃபிளவர், டியோன் இப்ராஹிம், ஹமில்டன், ஹமில்டன் மஸகட்ஸா, டைவிட்டல், டடோன்டா தைபு, அன்டி பிளிக்னட், எம்முலேகி என்கலா, ட்ரவிஸ், பிரென்ட், ரேமன்ட், பிரைஸ், டக்ளஸ், ஹொன்டோ, மார்க் வேர்மேலன், ஸ்டுவர்ட் மட்ஸி கென்யாரி, சீன்எர்வின், ரிச்சி சிம்ஸ், கெவின் எவிங், கம்பெல் மெக்மிலன். (ம)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 - 11 - 1910

மறைவு 20 - 10 - 1998

### அமரர் கந்தப்பிள்ளை வல்லிபுரம்

திதி: 05.11.2002

அன்னை, தந்தை, தெய்வம், குரு என்ற நான்குமாய்
எம்மை நற்பண்புடன் அவனியில் வாழவைத்த
அன்பு அப்பாவே! நான்கு ஆண்டுகளானாலும்
நாம் மறவோம் உம் நினைவை!

*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*
குடும்பத்தினர்.

*பூட்டசாலையடி,*
*நவற்கிரி புத்தூர்.*

(10285)


# மேற்கிந்திய - இந்திய டெஸ்ட் போட்டி தொடர்

கல்கத்தா,நவ.5

இந்திய மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரங்களான சச்சின் டெண்டுல்கர், வி.வி.எஸ்.லக்ஷ்மன் ஆகியோரின் அபார ஆட்டத்தின்மூலம் அந்த அணி தோல்வியிலிருந்து மீண்டது.

கல்கத்தாவில் நடைபெற்ற இப்போட்டியில் மேற்கிந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 497 ஓட்டங்களைப் பெற்றது. போட்டியின் மூன்றாவது நாள் ஆட்ட முடிவில் அந்த அணி 5 விக்கெட் இழப்பிற்கு 446 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. போட்டியின் நான்காவது நாளான சனிக்கிழமை காலை சந்தர்போல் 140 ஓட்டங்களுடனும், சாமுவேல்ஸ் 104 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து மேற்கிந்திய அணியின் பின்வரிசை விக்கெட்டுக்கள் மளமளவெனச் சரிந்தன.

சாமுவேல்ஸ் டெஸ்ட் போட்டியில் பெற்ற முதலாவது சதம் இதுவாகும்.

இந்தியப் பந்து வீச்சாளர்களில் ஹர்பஜன்சிங் 115 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், அனில் கும்ப்ளே 169 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

சனிக்கிழமை அன்று தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி, ஆரம்பத்தில் 87 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்டுக்களை இழந்தது. எனினும், சச்சின் டெண்டுல்கர் தனது அதிரடி ஆட்டத்தின்மூலம் இந்திய அணியைப் பலப்படுத்தினார்.

சனிக்கிழமை மாலை ஆட்ட முடிவின்போது டெண்டுல்கர் 114 ஓட்டங்களுடனும், வி.வி.எஸ்.லக்ஷ்மன் 32 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். அப்போது இந்திய அணி 4 விக்கெட் இழப்பிற்கு 196 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

போட்டியின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் சச்சின் டெண்டுல்கர் 176 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டமிழந்தார். இந்த டெஸ்டில் சதம் பெற்றுக்கொண்டதை அடுத்து தனது 31ஆவது சத டெஸ்ட் சதத்தினையும் அவர் பூர்த்தி செய்துள்ளார். டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக சதங்களைக் குவித்த சுனில் கவாஸ்கரின் சாதனையை சமப்படுத்த இன்னும் 3 சதங்கள் வரவேண்டிய நிலை சச்சினுக்கு உள்ளது.

இந்திய அணி 8 விக்கெட் இழப்பிற்கு 471 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் போட்டி முடிவுக்கு வந்தது.

வி.வி.எஸ்.லக்ஷ்மன் ஆட்டமிழக்காது 154 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் போட்டியில் இவர் பெற்ற 4ஆவது சதம் இதுவாகும். சுழல் பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் 18 பந்து வீச்சுகளில் 2 சிக்ஸர்கள் உட்பட 26 ஓட்டங்கள் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் சிறப்பாட்டக் காரராக சச்சின் டெண்டுல்கரும், தொடரின் சிறப்பாட்டக்காரராக - இத்தொடரில் 20 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய - ஹர்பஜன் சிங்கும் தெரிவு செய்யப்பட்டனர்.

மூன்று தொடர் கொண்ட இச்சுற்றுப்போட்டியில் முதலிரண்டு போட்டிகளிலும் வெற்றி கொண்டதன்மூலம் 2:0 என்ற அடிப்படையில் இத்தொடரின் வெற்றியை இந்திய அணி தனதாக்கிக் கொண்டது.

இதேவேளை, இந்த இரு அணிகளுக்கும் இடையிலான 7 ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் இடம்பெறவுள்ளன. இதில் இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரமான சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட்போட்டியின்போது நீண்டநேரமாகக் களத்திலிருந்து துடுப்பெடுத்தாடியமையால் காலில் தசைப்பிடிப்புக் காரணமாக இந்த ஏழு போட்டிகளிலும் பங்குபற்றமாட்டார் என்றும் -

இவருக்குப் பதிலாக அணியிலிருந்து நீக்கப்பட்ட தினேஷ் மொங்கியா மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் -

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியா தெரிவித்துள்ளார். (ஏ-5)


## ஆசிரியர் பதவி வெற்றிடம்

### சத்திய சாயி மனித மேம்பாட்டு வித்தியாலயம்

மானிப்பாயில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி வித்தியாலயத்தில் ஆண்டு ஒன்றிற்கான ஆசிரியர் பதவிக்கு வெற்றிடம் உண்டு.

*தகைமை:* க.பொ.த. உயர்தரம் சித்தி.
*வயது:* 25-40 இடைப்பட்டவர்கள்

ஆசிரிய அனுபவம் உடையவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும். பொருத்தமான சம்பளம் வழங்கப்படும். தகுதி உடையவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு 30.11.2002இற்கு முன் கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

**R.வசந்தசேனன்,**
*சத்திய சாயி இணைப்புக் குழுத் தலைவர்,*
13, ஆஸ்பத்திரி ஒழுங்கை, மானிப்பாய். (10283)

# தமிழ்மொழிக்கு உரிய அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தால் தமிழீழப் பிரச்சினை தாய்லாந்துவரை சென்றிராது!

### கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் தெரிவிப்பு

தமிழ்மொழிக்கு உரிய அந்தஸ்து கொடுக்காத காரணத்தால், தமிழீழப் பிரச்சினைபற்றி தாய்லாந்துக்குச் சென்று பேச்சுக்கள் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு சமீபத்தில் பொலீஸ் தலைமையகத்தில் பொலீஸாருக்கான தமிழ்க் கற்கைநெறியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளரும் அரசகரும மொழிகள் ஆணைக்குழுத் தலைவருமான டி.யு.குணசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் 25 வீதமான மக்கள் தமிழ் மொழியை பேசுகின்றனர். இருந்த போதிலும் ஐந்து வீதமான தமிழ் மக்களே அரச திணைக்களங்களில் கடமையாற்றுகின்றனர்.

1956ஆம் ஆண்டு சிங்கள மொழியை அரசகரும மொழியாக்கிய தன் விளைவை இன்று கண்கூடாகப் பார்க்கின்றோம்.

1966ஆம் ஆண்டு தமிழ்மொழியை அரசகரும மொழியாக பிரகடனப்படுத்த, டட்லி சேனநாயக்க முயன்ற போதும் அதை அமுல்படுத்த முடியாமற்போனது. இந்த விளைவுகளின் தொடர்ச்சியாகவே தனிநாடு கேட்டு தமிழர்களின் போராட்டம் ஆரம்பித்தது 1972ஆம் ஆண்டுவரை தமிழ் மொழியைத் தேசிய மொழியாக்க முடியாமற்போனது. 1978ஆம் ஆண்டு தமிழ் மொழி, தேசிய மொழியாக பிரகடனப் படுத்தப்பட்டபோதும் மொழிக்கு உரிய அந்தஸ்தை வழங்க யாரும் முன்வரவில்லை.

13ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டு தமிழ் மொழி அரசகரும மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. 1943ஆம் ஆண்டு தமிழ்மொழியும் அரசகரும மொழியாக்கப்படவேண்டும் என்ற தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டபோதிலும், 1988ஆம் ஆண்டே அதை அமுல்படுத்த முடிந்தது. தமிழ்மொழி நிர்வாக மொழியாக்கப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டபோதும் நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை. புத்தளம், நுவரெலியா, பதுளை, கண்டி போன்ற பகுதிகளில் தமிழர்கள் செறிந்து வாழ்கின்றனர். இந்தப் பகுதிகளில் உள்ள பொலீஸ் நிலையங்களிலும் கூட தமிழில் கடமையாற்றக்கூடிய பொலீஸார் இல்லை.

சிங்களவர்கள் தாம் சிறுபான்மையாக இருந்திருந்தால் எப்படியான கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டி வரும் என ஒருமுறை சிந்தித்துப் பார்த்தால் அதன் பாதிப்பும், விளைவும் எப்படியானது என்பது தெரியும். இதைப் போல கிழக்கு எல்லைப் புறங்களில் வாழும் சிங்கள மக்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன. அங்கு சிங்களம் பேசும் அதிகாரிகள் நியமிக்கப்படல் வேண்டும். மொழி கற்காவிட்டால் இனி அரச திணைக்களங்களில் தொழில் வாய்ப்பு வழங்கக்கூடாது.

தமிழர் சிங்களமொழியையும், சிங்களவர் தமிழ்மொழியையும் கற்க வேண்டும் என அரசுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. மறுபுறம் தேசிய வைத்தியசாலைகளில் 98 சதவீதமான தாதிமார்களுக்கு தமிழ் தெரியாது. இதன காரணமாக தமிழ்பேசும் நோயாளர்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மக்களுக்கு மிகவும் நெருங்கிய உறவைக் கொண்டுள்ளவர்கள் பொலஸார் மட்டுமே. எனவே, பொலீஸார் கட்டாயம் தமிழ் கற்கவேண்டும் - என்று அவர் கூறினார். (ஓ)

### பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள

# முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் இன்று பிரதமருடன் சந்திப்பு

நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று அலரிமாளிகையில் இன்று நடைபெற உள்ளது.

வரவு - செலவுத் திட்ட அறிக்கை, நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் போது அதற்கான வாக்களிப்பில் கலந்து கொள்வது குறித்தே சந்திப்பின் போது ஆராயப்பட உள்ளது.

கிழக்கு மாகாணத் தனியலகு, கூட்டுச் செயலணி உருவாக்கம் போன்ற விடயங்களில் கட்சித் தலைமையுடன் முரண்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் சரியான உத்தரவாதத்தைத் தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நாடாளுமன்ற பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அஞ்சல் வாகன பணியாளர்கள் இங்கு தங்க வசதியில்லையாம்

தென்மராட்சி,நவ.5

ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர் அஞ்சல் திணைக்களத்தினால் நடத்தப்படும் வவுனியா - யாழ்ப்பாணம் அஞ்சல் வாகன சேவை ஆரம்பித்து நான்கு மாதங்களுக்கு மேலாகிறது. ஆயினும், அஞ்சல் சேவை வாகனத்தில் வரும் சாரதி உட்பட உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத்தில் தங்குவதற்கு போதிய வசதிகள் செய்யப்படவில்லை. இதனால், வாகனத்திலேயே இரவுப் பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் அஞ்சல் பொதிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் வரும் வாகனம் செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாள்களில் இங்கிருந்து செல்கின்றது. யாழ்ப்பாணத்தில் வாகனம் தரித்திருக்கும் நாள்களில் வாகனத்தில் வருவோர் தங்குவதற்கு இதுவரை வசதி செய்துகொடுக்கப்படாததால் வாகனத்திற்குள்ளேயே தங்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## சீரற்ற வீதிகள்

வலிகாமம்தெற்கு,நவ.5

சண்டிலிப்பாய் மத்தி வீரபத்திரர் கோவிலடி வீதி மற்றும் சண்டிலிப்பாய் தோப்பு வீதி என்பன கடந்த 25 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் உள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-152)

# 'திவயின' பத்திரிகையின் செய்திக்கு ரிசாத் பதியுதீன் எம்.பி. கண்டனம்!

புத்தளம்,நவ.5

இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் தொடர்பாக பொய்ப் பிரசாரங்களைக் கட்டவிழ்த்து அதன் மூலம் ஏற்படும் இன மோதல்களில் சில சிங்களப் பத்திரிகைகள் குளிர்காய முயல்கின்றன. இந்த இனவாத செயலை சமாதானத்தை விரும்பும் எந்தவொரு மகனும் ஏற்றுக்கொள்ளமாட்டான்.

'திவயின' சிங்களப் பத்திரிகையில் சமீபத்தில் வெளியாகியுள்ள முஸ்லிம்கள் தொடர்பான செய்திக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'இலங்கையில் சமாதான முன்னெடுப்புகள்' என்னும் பொருள் பற்றி நேற்றுமுன்தினம் புத்தளம் இபுனு பதூதா மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் ரிசாத் பதியுதீன் உரையாற்றினார். அவர் அங்கு மேலும் உரையாற்றியதாவது:-

சவூதி அரேபியாவின் உதவியுடன இலங்கையில் சுமார் 700 மதுரசாக்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் வெளிநாடுகளில் கல்வி கற்ற முஸ்லிம் இளைஞர்கள் ஒஸாமா பின்லேடன் அமைப்பில் பயிற்சி பெற்று மேற்படி மதுரசாக்களில் சேவையாற்றுவதாகவும், அவர்கள் அல்கெய்டா போன்ற தீவிரவாத இயக்கங்களை இலங்கையிலும் அறிமுகம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் 'திவயின' பத்திரிகை உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

இச் செய்தி குறித்து முஸ்லிம்கள் அதிக கவலை கொண்டுள்ளனர். சமாதானப் பேச்சுக்கள் மூலம் அமைதியும், நிம்மதியும் திரும்பவும் வரக்கூடிய இச்சந்தர்ப்பத்தில் சமாதானத்தை விரும்பாத சில தீயசக்திகள் இப்படியான பொய்ச் செய்திகளை வெளியிட்டு மறுபடியும் அழிநிலையை அடைய ஆவல் கொண்டுள்ளன.

மீண்டும் ஓர் இனக்கலவரத்தை ஏற்படுத்தி அதன் மூலம் குளிர் காய நினைக்கும் இனவாத சக்திகள் குறித்து மூவின மக்களும் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும்.

சமாதானத்தை விரும்பும் எந்தவொரு தொடர்பு சாதனமும் இப்படியான திரிபுபடுத்தப்பட்ட செய்திகளை பிரசுரிக்காமல் இருப்பது அவர்களின் தார்மீகக் கடமையாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# பயங்கரவாதத் தாக்குதல்கள் தாய்லாந்திலும் நடக்குமா?

### மறுக்கிறார் அந்நாட்டுப் பிரதமர்

பாங்கொக்,நவ.5

இந்தோனேசியாவின் பாலித் தீவில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களை அடுத்து, தாய்லாந்திலும் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெறலாமென மேற்கு நாடுகள் விடுத்த எச்சரிக்கைகள், எந்த அடிப்படையும் இல்லாதவை என்று தாய்லாந்துப் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

பிரிட்டன், அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளே இவ்வாறான எச்சரிக்கைகளை விடுத்திருந்தன.

தென்கிழக்காசிய நாடுகளுக்கு விஜயம் செய்யும் தமது பிரஜைகள், பயங்கரவாதத் தாக்குதலையிட்டு அவதானமாக இருக்க வேண்டுமென அந்த நாடுகள் எச்சரிக்கை விடுத்திருந்தன.

எனினும் தாய்லாந்தில் எந்தவொரு பயங்கரவாத அச்சுறுத்தல்களும் இல்லை என்றும் -

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் அங்கு செல்வதை, பிற்போட வேண்டியதில்லை என்றும் -

தாய்லாந்துப் பிரதமர் கூறியுள்ளார்.

தாய்லாந்தின் மொத்த உள்ளூர் உற்பத்தியில் 6 சதவீதம் உல்லாசப் பயணத்துறை மூலமே கிடைக்கிறது. கடந்த வருடம் மட்டும் ஒரு கோடி வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் தாய்லாந்துக்கு விஜயம் செய்திருந்தனர். (ஐ-9)

# மட்டக்களப்பில் அடுத்த ஆண்டு ஐ.நா. அபிவிருத்தித் திட்டங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் அடுத்த வருடம் முதல் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

இது தொடர்பாக ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் றிச்சேட் கொன்சன், கருத்திட்ட உதவியாளர் நிர்மலன் கார்த்திகேயன் மட்டக்களப்பு இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள செல்வி ஜெனிபர் ஆகியோர் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்து பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

இணைப்பாளர் அலுவலகம் மட்டக்களப்பு நகரில் திறக்கப்பட்ட பின்னர் நடவடிக்கைகள் ஆரம்பமாகும். (ஐ-9L)

# கல்விச்சாலைக் காட்சிகள்



யாழ். கார்மேல் சிறுவர் பாடசாலையின் 'பெற்றோர்கள் தினம்' அண்மையில் நடைபெற்றது. அந்த விழாவில் பெற்றோர்களை வரவேற்று சிறுவர்கள் வரவேற்புப் பாடல் பாடிய காட்சி. (ஐ)



பண்டத்தரிப்பு செ.ன்.மேரீஸ் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.தென்மேற்குப் பிரதேச சபை செயலாளர் பிரான்சிஸ விக்டர், மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்திரு.ம.பெ.ஞானரத்தினம் அடிகளார், முன்பள்ளி ஆசிரியை திருமதி லில்லி யஸ்ரினா அமிர்தநாயகம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-135)



வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக சபை பதவி ஏற்பு வைபவம் அண்மையில் நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட லயன் இ.நடராசா, காட்டுப்புலம் அரசினர் த.க. பாடசாலை மாணவர்களுக்குரிய பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதியை அதிபர் என்.தனபாலசிங்கத்திடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். கழகத் தலைவர் வி.வேலுப்பிள்ளை, முன்னாள் தலைவர் டாக்டர் சி.சதாசிவம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-135)



உடுவில் மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவில் விசேட விருந்தினராகக் கலந்துகொண்ட தென்னிந்தியத் திருச்சபை பேராயர் அதிவண. கலாநிதி கே.ஜே.சாமுவேல், திருமதி சாமுவேல், ஆங்கில ஆசிரியை செல்வி கிறேஸ் மங்கர், கல்லூரி அதிபர் செல்வி சி.வி.செல்லையா உட்பட பிரமுகர்கள் சேர்ந்து கல்லூரி கீதம் இசைப்பதைப் படத்தில் காணலாம். (எ-152)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

கனடாவில் வசிக்கும் இந்துக் குடும்பத்தில் 1972 இல் பிறந்த, கேட்டை நட்சத்திரம் உடைய மண மகனுக்கு அதே மதத்தைச் சேர்ந்த படித்த, பண்பான குடும்பத்தில் பிறந்த பொருத்தமான 26 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. தொடர்பு: 021-222 3848 (10266)

## தவறிவிட்டது

நவம்பர் 2 ஆம் திகதி கொழும்பிலிருந்து வரும்போது முக்கிய ஆவணங்களுடன் பல பொருள்கள் அடங்கிய (BAG) ஒன்று மினிபஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அ.திரேசம்மா, 143/1 ஸ்ரான்லி வீதி, அத்தியடியில் ஒப்படைத்துதவவும். (10261)

பஞ்சாட்சரம் நிரஞ்சனி என்பவரின் தேசிய அ.அ. (807051547V), விசேட (091038470) அடையாள அட்டைகள் 01.11.2002 அன்று யாழ்நகரப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் "பழைய தபாற்கந்தோர் வீதி, K.K.S. வீதி, கொக்குவில்" என்னும் முகவரிக்குக் கொடுத்துதவவும். (10273)

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள YAMAKA MATE 50 (NEWSMATE - YCLS) விற்பனைக்குண்டு. தொடர்பு: பரகு (ஆசிரியர்), இல.73, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, முடமாவடி, யாழ்ப்பாணம். (10232)

பல நிற லவ்பேட்ஸ் குருவிகளும், பிங்கஸ், ஆபிரிக்கன் லவ்பேட்ஸ் மற்றும் பல இனக்குருவிகளும், பல நிறக் கினிக்கோழிகளும் விற்பனைக்குண்டு. தினமும் 1.00 மணிக்குப் பின்னர் பார்வையிடலாம். தொடர்பு: அருமைராசா இதயராசா, பழைய பொலீஸ் நிலையம், பழம் றோட், ஆனைக்கோட்டை. (10284)

## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை கிழக்கில் 7பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:K.தங்கத்துரை (ஆசிரியர்), சங்கரத்தை, வட்டுக்கோட்டை. (10281)

## கடை விற்பனைக்கு

மின்சார நிலைய வீதிக்கும், ஸ்ரான்லி வீதிக்கும் இடைப்பட்ட கஸ்தூரியார் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய மாடிக்கடை ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.128, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (10138)

## ஒத்துமாறல்

கொழும்பு பாடசாலை ஆசிரியை யாழ்மாவட்ட ஆசிரியருடன் ஒத்துமாற விரும்புகிறார். (Mutual Transer) யாழ். நகர பாடசாலை விரும்பத்தக்கது. தொடர்பு: இல.1693, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (10246)

## குப்பிளான் வடக்கு மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,நவ.5

குப்பிளான் வடக்குப் பகுதி வீதிகளில் மின்கம்பங்கள் பறிக்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் கடந்த 1999ஆம் ஆண்டு மின்கம்பங்கள் நிறுத்தப்பட்டன. இப்பகுதிக்கு மின் இணைப்புக்களை வழங்குமாறு அப்பகுதி மக்கள் மின்சார சபையிடம் பல தடவைகள் கேட்டுக்கொண்டபோதிலும் இதுவரை எவ்வித பயனும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

## ஆலயப் பகுதியில் இருந்த விகாரை அகற்றப்பட்டது

கொழும்புத்துறை,நவ.5

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய அர்ச்சகர் வளவினுள் அமைக்கப்பட்டிருந்த பௌத்த விகாரை முற்றாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அப்பகுதி மீள்குடியமர அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு சென்றுவந்த மக்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அந்த விகாரையானது 'பிளைவ்வுட்' போன்ற மெல்லிய மரப்பொருள்களினால் செய்யப்பட்டு, தேவையான போது அகற்றக்கூடிய முறையில் சிமெந்து கட்டின்மேல் வைக்கப்பட்டு இருந்ததாகவும் கூறப்படுகிறது. (ஓ-30)

# கண்ணீர் அஞ்சலி



*யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் கௌரவ பொருளாளர்*

**ஐயாக்குட்டி செல்வராசா**

அவர்கள் ஸ்கந்தா விளையாட்டு மைதானத்தில் காலமானதையிட்டு நாம் மிகவும் துயரமடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம். கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்
*வலிகாமம் உதைபந்தாட்ட லீக்.*

(சி-24707)

# கண்ணீர் அஞ்சலி



**அமரர் ஐயாக்குட்டி செல்வராசா**

**(செல்வம்) அவர்கள்**

*தமிழீழத்துக்காய் தன்னையே ஈன்ற செல்வத்*
*தமிழ்மகன் – நீ*
*அமிழ்தான விளையாட்டில் அமரருலகு அடைந்தாயே!*
*விளையாடும் நேரத்தில் உயிர்பறித்தானே காலனவன்*
*விளையாத பூமியிலே விதைத்தார்களே விதையாக!*

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு: 16-06-1949
உதிர்வு: 02-11-2002

யங் ஹென்றீசியன் விளையாட்டுக்கழகம்.
*இளவாலை.*

(10291)

# கண்ணீர் அஞ்சலி



புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலனசபையின் கௌரவ செயலாளர்

**அமரர் நாகமணி கருணாநந்த சிவம்**

அவர்கள்

03.11.2002இல் அமரரான செய்திகேட்டு நாம் மிகவும் துயரமடைகின்றோம். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்திபெற ஸ்ரீ முத்துமாரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**ஆலய பரிபாலன சபையினர்.**

*ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்,*
*பெருங்காடு 3ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.* (10234)

# மரண அறிவித்தல்கள்

## சந்தியோ டோமினிக் லோறன்ஸ்

இல.639, கடற்கரை வீதி, குருநகரைப் வசிப்பிடமாகக் கொண்ட S.D.லோறன்ஸ் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை(03.11.2002) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியோ டோமினிக் அன்னம்மாவின் அருமை மகனும் காலஞ்சென்ற சவிரியம்மாவின் அன்புக் கணவரும், மரியம்மாவின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஞானம்மா, எலிசம், திரேசம்மா, மத்தியூஸ், மூடியப்பு ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற எமில் அஞ்சலோ மற்றும் மேரி பவுலின், மேஜாய், யூஜின், அஞ்சலா, கிறிஸ்ரி, றெஜினோல்ட் ஆகியோரின் அன்புத் தந்தையும் அருட்சகோதரி விக்ரோரியா(தி.கு.க.மடம், பாஷையூர்) அவர்களின் மைததுனியும், சூசைதாசன், பற்றீசியா, யோசப், ஜோன்சன் கொலின், ஞானசோதி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று(05.11.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*639, கடற்கரை வீதி,*
*குருநகர்,*
*யாழ்ப்பாணம்.* (10282)

தகவல்:
சூசைதாசன்
(மருமகன்)

## தர்மலிங்கம் ரவிச்சந்திரன் (ரவி)

(காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

பளை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு நகரினை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் ரவிச்சந்திரன் (ரவி) அவர்கள் நேற்றுமுன்தினம் (03.11.2002) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் தர்மலிங்கம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்புமகனும் திருமதி இராசா - சரஸ்வதியின் அன்புமருமகனும் சகுவின் அன்புக்கணவரும் நிரோசிகா, நிசாந்திகா ஆகியோரின் அன்புத்தந்தையும் சஞ்சினி, இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுன்னாகம் கிழக்கில் உள்ள தாயாரின இல்லத்தில் இன்று (05.11.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுன்னாகம் கிழக்கு,*
*சுன்னாகம்.*
(10293)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.

## சுவேதா சில்க்ஸ் ஸ்தாபனத்தாரின்

**தீபாவளி பண்டிகை தின சீட்டிழுப்பு முடிவுகள்**

பரிசுக்கான சீட்டை இலக்கங்கள்

முதலாம் பரிசு இலக்கம் 261
இரண்டாம் பரிசு இலக்கம் 065
மூன்றாம் பரிசு இலக்கம் 251

இப்பரிசுகளுக்குரிய சீட்டைகளை வைத்திருப்பவர்கள் எமது ஸ்தாபனத்தில் பரிசுகளை நேரில்வந்து பெற்றுக் கொள்ளலாம்.

சுவேதா சில்க்ஸ்
ஸ்தாபனத்தார்.

(10292)

## ஈரவிழிகளுடன் மூன்றாவது ஆண்டில்....



# கரும்புலி மேஜர் அருளன்

*(நந்தகோபாலன் துஷ்யந்தன்)*

வீரப் பிறப்பு 06-10-1977 — வீரச்சாவு 05-11-1999

"அம்மா நான் சாகவில்லை. எனது உயிரில் அரைவாசியை எமது தலைவரிடமும், மீதியை உங்களிலும், தங்கையிலும், என் பாசமிகு போராளிகளிலும், என் மக்களிலும்தான் வைத்திருந்தேன். என் உயிரை வைத்திருந்தவர்கள் ஒருவரும் சாகவில்லையே? அப்படியானால் நான் எப்படி சாகமுடியும்? எனது பெறுமதியற்ற உடலைத்தான் என் இலட்சியத்திற்காகச் சிதறடிக்க உள்ளேனே தவிர நான் வேறெதுவும் புதிதாகச் செய்யவில்லை"

கல்லூரி நண்பர்கள்
*க.பொ.த. (உ/த) 1996.*

(10290)

## யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

**வணிக ஜோதி**

**20ஆவது மலர் வெளியீட்டு விழா**

இடம் : கல்லூரி பிரதான மண்டபம்
காலம் : 07.11.2002 வியாழக்கிழமை காலை 10.00 மணி
தலைவர்: செல்வன் பா.கஜேந்திரன்

பிரதம விருந்தினர்
திருமதி தேவரஞ்சினி சிவாஸ்கரன்
(தலைவர், முகாமைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்
திரு. த. இராசலிங்கம்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ்.வலயம்)

நூல் வெளியீடும் வெளியீட்டுரையும்
திரு.க.சிவராசா
(விரிவுரையாளர், வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

முதற் பிரதி பெறுபவர்
திரு.K.விக்கினேஸ் (இயக்குநர் IIS)

அறிமுகவுரை
திரு.வ.செந்தில்ராஜா
(விரிவுரையாளர், யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
வணிக மாணவர் மன்றம்,
யாழ்.கனகரத்தினம் மத்திய ம.வி.

அன்பளிப்பு: சிவகணேசன் TEX
41, GRAND BAZAAR JAFFNA.
பட்டு இவுளிகளின் சங்கமம்

(10288)





முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No. 50445
BS No. 5412:1996
License No. KM41240

Access Graphics

ஏக முகவர்கள்,
செயின்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337283-4
பெக்ஸ்: 446554

WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி

புங்குடுதீவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
திரு. க. அஜந்தன்
அவர்களின் அன்புத் தந்தையார்
**நாகமணி கருணானந்தசிவம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்,
*தீவுப்பகுதி தெற்கு-வேலணை.*
(10301)

# நன்றி கூறுகின்றோம்

## திருமதி பயஸ் றெபேக்காவின்

மரணச் செய்தி கேட்டு எமக்கு நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் செபித்தோருக்கும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு எம் துயரில் பங்கு கொண்ட அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள், அருட் சகோதரர்கள், பருத்தித்துறை பங்கு மக்கள், ஏனைய பங்கு மக்கள், அனபர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம.

அருட் தந்தை இருதயதாஸ்,
அருட் சகோதரி ஜெயா,மற்றும் சகோதரர்கள்.
(10302)

# யூனியன் ஆசான்களை வாழ்த்துகின்றோம்

ஆசிரியர் தின விழாவிலே எமது யூனியன் ஆசான்களை வாழ்த்த காத்திருந்தோம். விழா நடத்த தடைவிதிக்கப் பட்டதன் காரணமாக பரிசளிப்பு விழா நடைபெறும் இந்த நன்நாளில் ஆசான்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

*இக் கல்வியாண்டில் படைத்த சாதனைகள்.*

வலைப்பந்தாட்டம் - *வலய மட்டம்:*
19வயதுப் பிரிவு முதலாம் இடம்.
17வயதுப் பிரிவு 2ஆம் இடம்.
15வயதுப் பிரிவு 2ஆம் இடம்.
*மாவட்ட மட்டம்:*
19வயதுப் பிரிவு முதலாம் இடம்.
*மாகாண மட்டம்:* -
19வயதுப் பிரிவு 2ஆம் இடம்.

19வயது பிரிவு வலைப்பந்தாட்ட அணி பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்திய போட்டியில் 2ஆம் தடவையாகவும் பல்கலைக் கழக அணியுடன் மோதி முதலாம் இடம்பெற்றது.

*உதைபந்தாட்டம்:* 18வயதுப் பிரிவு கோட்டம், வலயம், மாவட்டத்தில் முதலாம இடம் பெற்றது.

19வயதுப் பிரிவு அணி அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட "மைலோ" கின்னச் சுற்றுப்போட்டியில் மாவட்டத்தில் முதலாம இடம பெற்றது.

*மேசைப்பந்து:*
ஆண், பெண் இரு பிரிவும் வலய மட்டம் முதலாம் இடம்.
*கரப்பந்து:* 19வயதுப் பிரிவு மாவட்டம் 2ஆம் இடம்.
*தமிழ்த் தினம்:*
நடனம் அகில இலங்கை ரீதியில் 4ஆம் பிரிவில் வி.ஜீவிகா - தங்கப்பதக்கம் பெற்றார்.
*குழு இசை மாவட்டம்:* I,II பிரிவுகள் முதலாம் இடம்.
*ஆங்கிலம் குழு இசை* மேற்பிரிவு:
மாவட்டம் முதலாம் இடம்.
மாகாணம் 2ஆம் இடம்.
கீழ்ப்பிரிவு:
மாவட்டம் 2ஆம் இடம்.

ஹற்றன் நஷனல் வங்கி நடத்திய போட்டியில் தனி இசை கு. ஜெகதீசன், தே.டயானி முதலாம் இடம்.

*கல்வி:*
க.பொ.த.உயர்தரம் 2002-2001இல் பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடம் - 3 உட்பட மொத்தம் 12பேர்.
க.பொ.த.சாதாரணதரம் 70 மாணவர் தோற்றி 68பேர் சித்தியடைந்து 66மோணவர் உயர்தரம் கற்க தகுதிபெற்றனர். மேலும் 8பாடங்களில் 100% *சித்திபெறப்பட்டது.*

பழைய மாணவர் சங்கம்
**யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.**

# காணவில்லை

## அம்பலவாணர் சிவபாதசுந்தரம்

(வயது80)



மயிலிட்டிவடக்கு, கொல்லன் கலட்டி ஆகிய இடங்களை நிரந்தர வதிவிடமாகவும், தற்போது உடுவில் தெற்கு, சுன்னாகம் எனும் முகவரியில் வாழ்ந்து வந்தவருமான இவரை 27.10.2002 தொடக்கம் காணவில்லை. இவர் பொது நிறமும் கட்டையான தோற்றமும் கொண்டவர். வெள்ளை நிற நான்கு முழ வேட்டியும் சேட்டும் அணிபவர். இவரை தற்பொழுது கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரியில் அல்லது தொலைபேசியூடாக தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப் படும்.

சி.சண்முகநாதன்
*தில்லைகட்டி,*
*சுன்னாகம்.*
T.P.: 021-2223007
021-2223019
(10295)

# கட்டாயப்படுத்தி நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.5

தெற்கிலுள்ள விதவைகள் மற்றும் அநாதைச் சிறுவர்களுக்கு உதவுவதற்கெனத் தெரிவித்து குடாநாட்டில் வலுக்கட்டாயமாக நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் குழு ஒன்று ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேர்த்தியாக ஆடை அணிந்து வரும் சிலர் வீடுகளுக்குள் புகுந்து சிங்கள மொழியிலான ஆவணங்களைக் காட்டி - சிங்கள மொழியில்பேசி - நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர் என றும் -

நல்லூர்ப் பகுதியில் உள்ள வீடுகளில் இந்தக் குழு நேற்று நிதி சேகரிப்பில் ஈடுபட்ட வேளை சில வீடுகளில் நிதி கேட்டு மக்களை கட்டாயப் படுத்தினர் என்றும் கூறப்படுகின்றது.

பட்டியலில் ஏற்கனவே வழங்கிய தொகையையே வழங்கும்படி அவர்கள் மக்களை வற்புறுத்தினர். ஆகக் குறைந்த தொகையாக 250ரூபா தர வேண்டும் என வற்புறுத்தினர்.

குருநாகலில் உள்ள அநாதைச் சிறுவர் இல்லம் மற்றும் விதவைகள் இல்லம் ஆகியவற்றுக்கு உதவுவதற்காக நிதி சேகரிப்பில் ஈடுபடுவதாக அவர்கள் தெரிவித்தனர். (ஜ-3)

# காய்ச்சலால் இளைஞன் மரணம்

யாழ்ப்பாணம்,நவ.5

ஐந்துநாள் காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்ட இளைஞன் ஒருவர் நேற்று மரணமானார். இனந்தெரியாத காய்ச்சல் ஆரம்பித்து இரு நாள்கள் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்ற இவர் காய்ச்சல் குறையாத தால் கடந்த முதலாம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அதிதீவிர சிகிசசைப் பிரிவில் சிகிச்சைக்கு உட்பட்டிருந்தவேளை சிகிச்சை பயனளிக்காது மூன்று நாளகளின் பின் நேற்று அங்கு உயிரிழந்தார்.

நுணாவில் மேற்கைச்சேர்ந்த கிரிஸதுராசா நியாஸ் (வயது17) என்பவரே மரணமானவராவார். (ம-15)

# பரிசளிப்பு விழா

சர்வதேச சிறுவர்தின, முதியோர் தின போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் மருதங்கேணியில் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30மணிக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

(ம.182)

# வாராந்த நிகழ்வு

தொண்டமானாறு சந்நிதியான் சைவ கலைபண்பாட்டுப் பேரவை வெள்ளிக் கிழமை தோறும் நடத்திவரும் வாராந்த நிகழ்வில் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் காரை எம்.பி.அருளானந்தன் 'கந்தன் கருணை' என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

(எ-135)


ராஜா யாழ்ப்பாணம்.
வில்லன் (ரீலஸ்)
கா.நே: 10.30, 2.30, 6.30 } (புதிய நேரம்)
விசேட காட்சி:9.30
(C-29616)

லக்சுமி இணுவில்
சியாம், ஸ்நேகா, விவேக் நடித்த
ஏய் நீ ரொம்ப அழகா இருக்கே! (ரீலஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30
(10300)

நிரஞ்சனாஸ் சங்கானை
விஜய், சிம்ரன் நடித்த
துள்ளாத மனமும் துள்ளும்
காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)
இரவு 8.45 (சனி,ஞாயிறு மட்டும்)
FINAL FIGHT (கராட்டிப்படம்)

நாகம்ஸ் சுன்னாகம்
குணால், மனோஜ், அனிதா, நம்பியார் நடிக்க
வருஷமெல்லாம் வசந்தம் (ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்)
(10287)


# கொழும்பில் வேலை வாய்ப்பு

## நிர்வாக உதவியாளர் [பயிலுநர்]

கொழும்பிலுள்ள கொம்பியூட்டர் சார்ந்த முன்னணி வர்த்தக நிறுவனத்துக்கு பயிலுநர்கள் தேவை (ஆண்கள்). முன்னனுபவம் தேவையில்லை. நிர்வாகத்திறன், சுயமுயற்சி, தன்னார்வம் மிக்க 23வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.
தங்கு மிட வசதி உண்டு.

நேர்முகத் தேர்வு: நாளை (06.11.2002) பிற்பகல் 2.00 மணிக்கு *CASIO SCIENCE CENTRE, 3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காட்டில் நடைபெறும். சுயவிவரக் கோவையுடன் சமுகந்தரவும்.* (10305)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 05 . 1930



மறைவு 28 . 10 . 2000

## அமரர் தம்பியையா கிருபரட்ணம்

ஆண்டுகள் இரண்டு ஆனபோதும் ஆறவில்லை இதயமே
ஈண்டு உம்மை நினைத்து நாம் நிதமுமே தவிக்கிறோம்
தூண்டிலிட்ட புழுவாகத் துடிக்கும் எம்மை விட்டு நீர்
மாண்டு போன தேனையா மீண்டும் ஒரு முறை வாரீரோ!

*காங்கேயன் பேக்கரி,*
*கே.கே.எஸ்.வீதி,*
*மல்லாகம்.*
(10296)
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரபிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## இளங்கோவன் பிரதாபன்

பழைய ஆஸ்பத்திரி வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி என்ற முகவரியைச் சேர்ந்த இளங்கோவன் பிரதாபன் 03.11.2002 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் மகாலிங்கம் இளங்கோவன் - இளங்கோவன் இரஞ்சினி தம்பதியரின் இரண்டாவது மகனாவார்.

தகவல்:
க.தர்மலிங்கம்
(பெரிய தந்தை)
*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.*
(C-24708)

## திருமதி கண்மணி நடராஜா

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (5.11.2002) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு 22,கண்டிவீதியிலுள்ள அன்னாரது இலலத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக சென்.ஜோன்ஸ் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:-
மகன் வண.பிதா
ந.ஜேம்சன்ஞானபொன்ராஜா
(உபஅதிபர், சென்.ஜோன்ஸ் கல்லூரி)
(10198)

## ஐயாக்குட்டி செல்வராசா (செல்வம்)

மயிலணி வடக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்தவரும் மல்லாகம் பிரதேச சபை ஊழியரும் யாழ்.மாவட்டம், வலிகாமம் லீக் ஆகியவற்றின் உதைபநதாட்ட மத்தியஸ்தரும் பொருளாளரும் சிறந்த சைக்கிள் ஓட்ட விளையாட்டு வீரருமான ஐயாக்குட்டி செல்வராசா 02.11.2002 அன்று மாலை காலமானார்.

அன்னார் ஐயாக்குட்டி - சிவக்கொழுந்து தம்பதிகளின் மகனும் மாணிக்கம் - இளையபிள்ளை தம்பதிகளின் மருமகனும் இந்திராவின் அன்புக் கணவரும் வைகுந்தன் (சுவிஸ்), அனுசியா, முகுந்தன் (ஹொலண்ட்), கௌசிகா ஆகியோரின் அன்புத்தந்தையும் றொபின், பபிலா ஆகியோரின் அன்புமாமனாரும் பமில்டனின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2002) செவ்வாய்க்கிழமை அனனாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் மயிலணி வளர்பிறை சனசமூக நிலையதில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கொத்தியாலடி இந்துமயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.வைகுந்தன்
(மகன்).
*மயிலணி வடக்கு,*
*சுன்னாகம்.*
(10299)

## தி. கணேஸ்வரசர்மா

(முன்னாள் பிரதேச சபை செயலாளர், சுன்னாகம்)

சுன்னாகத்தைச் சேர்ந்த முன்னாள் பிரதேச சபை செயலாளர் தி. கணேஸ்வரசர்மா அவர்கள் வல்வெட்டித்துறையில் நேற்று (04.11.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா (சிவ ஐயர்) - இராசலட்சுமியம்மா அவர்களின் சிரேஷ்ட புத்திரனும் வல்வெட்டித்துறை சிவன்கோவிலடி காலஞ்சென்ற பரமேஸ்வரக்குருக்கள் மற்றும் தாட்சாயினி ஆகியோரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற மலர்மங்கையின் அன்புக்கணவரும் வத்சலா (ஹற்றன்)வின் தகப்பனாரும் சுப்பிரமணியசர்மாவின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2002) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12மணியளவில் வல்வெட்டித்துறையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப.மனோகரக்குருக்கள (மைத்துனர்)
தி.குமாரசதாசிவசர்மா
(சகோதரன்)
*சிவன் கோவில்,*
*வல்வெட்டித்துறை.*
(10307)

## இரு பௌத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களைச் சமாளித்து புலிகளுடன் யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொண்டு இரண்டு சுற்றுச் சமாதானப் பேச்சுக்களை நடத்தி முடித்துக்கொண்டதும் பௌத்த பீடாதிபதிகள் முற்றாக மனம் திருந்தினார்களோ, திருப்பினார்களோ புலிகளுக்கு ஆசீர்வாதம் வழங்கும் அளவுக்கு அவர்கள் மாறிவிட்டார்கள்.

புலிகளோடு அரசாங்கத்தரப்பில் இரண்டு சுற்றுப்பேச்சுக்கள் நடத்திய அரசாங்கக் குழுத் தலைவர் பேராசிரியர் பீரிஸ் பேச்சுக்கள் எப்படி நடந்தன, என்னென்னவெல்லாம் பேசப்பட்டன, என்ன முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன என்ற விவரங்களைத் தெரிவிப்பதற்காக நேற்று கண்டி தலதா மாளிகைக்குச் சென்றார்.

அங்கே மல்வத்த பீடாதிபதி விபஸி தேரரையும், அஸ்கிரிய பீடாதிபதி புத்தரக்கித்த தேரரையும் சந்தித்து எல்லா விவரங்களையும் ஆதியோடு அந்தமாகத் தெரிவித்தார்.

உடனே பீடாதிபதிகள் ஏகோபித்து புலிகளுக்கு தங்கள் ஆசியை வழங்கினார்கள். அவர்களை வெகுவாகப் பாராட்டினார்கள். அப்படியே அரசுக்கும் ஆசி வழங்கி பாராட்டுத் தெரிவித்தார்கள்.

பேராசிரியர் பீரிஸ் நேரில் சொல்லக்கேட்டதும் புலிகள் இப்போது போரை விரும்பவில்லை; அது மீண்டும் வெடிக்கக்கூடாது என்று நினைக்கிறார்கள்; சமாதானத்தில் உண்மையான ஆர்வம் கொண்டு அதை அடையத் துடிக்கிறார்கள்; ஜனநாயக நீரோட்டத்துக்குள் வர விரும்புகிறார்கள்; அவர்கள் நாட்டைப் பிரிக்கச் சொல்லவும் இல்லை; தனிநாடு கேட்கவும் இல்லை. ஒரேநாட்டில் தாங்கள் வரலாற்றுக் காலம் தொட்டு பாரம்பரியமாக வாழ்ந்துவரும் தாயகத்தில் சுயமாகத் தமது கருமங்களைப் பார்க்கும் தன்னாட்சி அதிகாரம் பெற்று மற்றச் சமூகங்களோடு கூடி வாழவே விரும்புகிறார்கள்.

அதற்காக அவர்கள் எவ்வளவோ விட்டுக்கொடுப்புகளுக்கும் தயாராக இருக்கிறார்கள். பேச்சுக்களில் பெரிதும் ஒத்துழைக்கிறார்கள்; அவர்களைப் பற்றி மற்றவர்கள் கொண்டிருந்த எத்தனையோ சந்தேகங்களை நீக்கி விட்டார்கள்.

அவர்களோடு பேசும்போதுதான் அவர்களைச் சந்தேகப்படுவதில் அர்த்தமில்லை என்பது புரிகிறது.

இப்படியாக எல்லாம் பேராசிரியர் பீரிஸ் எடுத்துக்கூறியவை பௌத்த பீடாதிபதிகளின் மனதைத் தொட்டு விட்டன. என்ன இருந்தாலும் கருணா மூர்த்தியான புத்தபெருமானின் பாதார விந்தங்களில் சரணடைந்த வணக்கத்துக்குரிய பெரியவர்கள அல்லவா? பெருந்தன்மையோடு பேராசிரியர் முன்னிலையிலேயே புலிகளைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்து அவர்களுக்கு ஆசியும் வழங்கினார்கள்.

தீபாவளித் திருநாளில் திருப்புமுனையாக இந்த மகிழ்ச்சிக்குரிய நிகழ்வு நேற்று நடந்தது. பேராசிரியர் பீரிஸ் மெய்சிலிர்த்துப் பூரித்துப் போனார். (ம)

## தமிழ்ச்செல்வன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ச்செல்வன், மட்டக்களப்பு - அம்பாறை சிறப்புத் தளபதி கருணா, அவரது மெய்க்காவலர்கள் ஆகியோர் கட்டுநாயக்கா விமான நிலையம் வழியே இன்று கிளிநொச்சிக்குத் திரும்புவர். கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து அவர்கள் ஹெலியில் பயணம் செய்வர். (ம)


## லொறி - வான் சாரதி உடன்தேவை

✪ வாகனசாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

*தேவையானவை*

1) சுயவிவரம்.
2) கிராமசேவையாளர் உட்பட இருவரின் நற்சான்றிதழ்கள்.
3) அங்கீகரிக்கப்பட்ட ஒருவரின் சிபாரிசுக் கடிதம்.

*மேலதிக தகைமைகள்*

※ கொழும்பு பற்றிய பிரதேச அறிவு.
※ நீண்ட தூரம் வாகனம் ஓட்டிய அனுபவம்.
※ வாகனப் பராமரிப்பும் பழுதுபார்க்கும் திறமையும்

18.10.2002 "உதயன்" நாளிதழில் வந்த லொறி - வான் சாரதி உடன் தேவை விளம்பரத்திற்கு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

புதிதாக விண்ணப்பிப்பவர்களும் ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும் 07.11.2002 வியாழக்கிழமை காலை 9மணிக்கு தேவையான ஆவணங்களுடன் "உதயன்" பணிமனைக்கு சமுகந்தரவும்.

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/24706)


## இராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச அதிபர் வேவிஸ்வலிங்கம் தலைமையில் அவரது அலுவலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டனர். இதில் இராணுவ, பொலீஸ், கடற்படை உயரதிகாரிகள் மற்றும் அரசஉயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டில் மன்னார் மாவட்டத்தில் பொதுமக்களின் வீடுகள் மற்றும் ஏனைய இடங்களில் இராணுவம் நிலைகொண்டிருப்பது பற்றி ஆராயப்பட்டது. அதை அடுத்து அப்பகுதிகளையும் தலைமன்னார், மதவாச்சி நெடுஞ்சாலைகளில் இராணுவம் நிலைகொண்டிருக்கும் இடங்களை அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

நீலாசேனை, பரப்பான்கண்டல் பகுதிகளைப் பார்வையிட்ட இவர்கள், விவசாயம் செய்வதற்கு விவசாயிகளுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்வதெனவும் தீர்மானித்தனர்.

இதேவேளை -

மன்னார் எருக்கலம்பிட்டிக்கு அருகில் உள்ள கோணார் பண்ணை குடியேற்றப்பகுதியில் உள்ள கடற்படைத் தளத்தை அகற்றி அப்பகுதி மக்கள் தமது வீடுகள், காணிகளில் மீளக் குடியமர்வதற்கு வழிசெய்து தருமாறு அப்பகுதி மக்களால் மேலதிகச் செயலாளரிடம் கோரப்பட்டது. (ம)

## திருகோணமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக முன்னேறி வருகின்றபோதிலும் நிலைமையை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு பாதுகாப்புப் படையினர் விழிப்புடனேயே இருந்து வருகின்றனர் என்றும் அமைச்சர் மாரப்பன கூறினார். திருகோணமலை கடற்படைத் தளத்துக்குச் சென்று அங்கு படை அதிகாரிகளுடன் உரையாடினார்.

இதற்கிடையே -

விடுதலைப் புலி உறுப்பினர்களின் இச்செயல் போர்நிறுத்தத்தை மீறுவதாகும் என்றும் அது குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கவலைப்படுவதாகவும் குழுவின் பிரதித் தலைவர் அன்ட்ரு ஹெறக்லண்ட் தெரிவித்திருக்கிறார். (ம)


எமது புதிய வீடியோ CD வெளியீடு
சாய்குமார் நடித்த
லோ அன்ட் ஆர்டர்
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல்,
யாழ்ப்பாணம்.
(C-24710)


# வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கு பொதுத்திட்டம் தயாரிப்பு!

## திருமலையில் நாளை செயலமர்வு

யாழ்ப்பாணம்,நவ.5

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை இனம் கண்டு பொதுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படவிருக்கின்றது.

இத்திட்டம் தயாரிப்பது தொடர்பான செயலமர்வு ஒன்று நாளை திருகோணமலையில் இடம்பெறவுள்ளது.

இச்செயலமர்வில் மாகாணசபை அதிகாரிகள், மாவட்டங்களின் அரச அதிபர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

உலகவங்கி மற்றும் நிறுவனங்கள் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான நிதி உதவிகளை மத்திய அரசு மூலமும் மாகாண அரசு மூலமும் வழங்கிவந்தன.

இனிமேல் அந்த உதவிகளை மாகாண சபைக்கே நேரடியாக வழங்க அந்த நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன.

இந்த உதவியைப் பயன்படுத்தி மேற்கொள்ளவேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்புப்பணிகள் தொடர்பாக நாளைய செயலமர்வில் ஆராயப்பட்டு பொதுத்திட்டம் ஒன்று வகுக்கப்படவுள்ளது. (ம-3)

# தமிழீழ காவல்துறை அலுவலகம் இன்று மட்டக்களப்பில் திறப்பு

மட்டக்களப்பு,நவ.5

மட்டக்களப்பு - அம்பாறை தமிழீழக் காவல்துறை இன்றுமுதல் இயங்கவுள்ளது என்று மட்டக்களப்பு - அம்பாறை காவல்துறை மேற்பார்வையாளர் பி.கங்கையன் நேற்றுத் தெரிவித்தார். காவல்துறை அலுவலகம் இன்று 10.00 மணிக்கு பளுகாமத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட விசேட தளபதி இதனைத் திறந்துவைக்கவுள்ளார். இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மோனகுருசாமி, மட்டு. - அம்பாறை புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், இராணுவப் புலனாய்ப்பிரிவுப் பொறுப்பாளர் ரமணன், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பானுகா உட்படப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

## காஞ்சிரங்குடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணதிலக தலைமையிலான குழு விசாரணைகளை நடத்திவரும் நேரத்தில் -

திடீரென 15 அதிரடிப்படையினரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.(ம-3)


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

வரணி வடக்கு, தம்பான் சனசமூக நிலையத்தினால் விநாயகர் சனசமூக நிலையத்தின் கட்டட அபிவிருத்தி நிதிக்கான அதிர்ஷடலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெறுவோர் விவரம்:

1 ஆம் பரிசு இலக்கம் 1674
2 ஆம் பரிசு இலக்கம் 4722
3 ஆம் பரிசு இலக்கம் 2315

ஆறுதல் பரிசுகள் இலக்கம் 1685, 3286, 5031, 3120, 8176, 4716, 6548, 3700, 3385, 7248

மேற்படி பரிசுக்கு உரியவர்கள் தம்பான் சனசமூக நிலையம் வரணி வடக்கு, எனும் முகவரியில் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு பரிசுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளவும்.

(10303) தம்பான் சனசமூக நிலையத்தினர்


## கண்ணீர் அஞ்சலி

உதைபந்தாட்ட மத்தியஸ்தரும் எமது இனிய நண்பருமாகிய

### ஐ.செல்வராசா

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-24711) நண்பர்கள்,உடற்கல்வித்துறை, யாழ்.கல்விவலயம்.

## மரண அறிவித்தல்கள்

### சாமுவேல் துரைரட்ணம் கனகரட்ணம்

மானிப்பாயைச் சேர்ந்த சாமுவேல் துரைரட்ணம் கனகரட்ணம் அவர்கள் 3.11.2002 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் திருமதி புஸ்பம் ரட்ணம் (ஓய்வு பெற்ற மருந்துக் கலவையாளர், கிறீன் மெமோறியல் வைத்தியசாலை, மானிப்பாய்), திருமதி தேவரஞ்சிதம் வோல்ற்றர் (கனடா), காலஞ்சென்ற அரியரட்ணம் கனகரட்ணம் (லண்டன்) மற்றும் ஜெயரட்ணம் கனகரட்ணம் (C.M. CO.OP மட்டக்களப்பு)) ஆகியோரின் சகோதரரும், செல்வக்குமார் (ஆதார வைத்தியசாலை, நுவரேலியா), வண தேவகுமார் (சியோன் தேவாலயம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (5.11.2002) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00மணிக்கு மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று (சியோன் தேவாலயம் அருகில்) பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடுவில் மல்வம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*மானிப்பாய்* (10229) புஸ்பம் ரட்ணம் வண தேவகுமார்

### கந்தையா கார்த்திகேசு (சிவபாதம்)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கார்த்திகேசு (சிவபாதம்) நேற்று (4.11.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்தையா சுந்தரம் தம்பதிகளின் மருமகனும் மாணிக்கத்தின் அன்புக்கணவரும் சுதாசன் (லண்டன்), சிவதர்சன், விஜயதர்சன், சுகிதர்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராஜலக்சுமியின் மாமனாரும் தர்மராஜா, கனகரட்ணம் ஆகியோரின் சகோதரனும் கந்தையா, பாலசிங்கம், காலஞ்சென்ற இராஜசிங்கம் மற்றும் தர்மலிங்கம் (சவூதி), தெய்வேந்திரம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5.11.2002) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆரியம்பிட்டி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி சந்தி,*
*நவாலி வடக்கு, மானிப்பாய.* (10304)

தகவல்:-
கா.சிவதர்சன் (மகன்)


# யாழ்.நகரில் டயலொக் G.S.M. தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்புடன்



## இணைந்து வழங்கும் தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்குகள்

### நவம்பர் 8ஆம் 9ஆம் திகதிகளில்

டயலொக் G.S.M. தொலைபேசிச் சேவை இப்பொழுது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை உள்ளிட்ட வடக்கு - கிழக்கு பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்களுக்கு தரமுயர்ந்த தொலைபேசிச் சேவை வழங்குவதுடன் மாத்திரம் நின்றுவிட நாம் விரும்பவில்லை.

நாடளாவிய ரீதியில் தமிழ் பேசும் மக்களிடையே தகவல் தொழில்நுட்பம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தி தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவைப் புகட்டிவரும் சேவை நிறுவனமான தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்பானது எம்முடன் இணைந்து இக்கருத்தரங்கை நடத்தவுள்ளது.

அதிநவீன G.S.M. தொழில்நுட்பம் அதன் பலதரப்பட்ட பிரயோகங்கள் இன்ரர்நெற் தொழில்நுட்ப என்பன பற்றி நீங்கள் சரியாக அறிந்து பயன்பெறவேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

இந்தநோக்கத்துடன் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்பு நிறுவனமும் இணைந்து யாழ்ப்பாணத்தில் இந்தக் கருத்தரங்குகளை நடத்த நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.

**08.11.2002 வெள்ளிக்கிழமை**
**காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி**
**மாலை 2 மணியளவில் யாழ்ப்பாணக் கல்லூரி**
**9.11.2002 சனிக்கிழமை**
**காலை 9.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபம்**
**மாலை 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகம்**

தகவல் தொடர்புகளுக்கு இன்ரர்நெற் மற்றும் G.S.M. தொழில் நுட்பங்களை எவ்வாறு சிறந்தமுறையில் பயன்படுத்தலாம் என்பதை அறிந்துகொள்ள யாழ்ப்பாண வாசிகளுக்கு இது அரியதோர் வாய்ப்பாகும்.

வாருங்கள் கருத்தரங்கில் பங்குபற்றி நன்மையடையுங்கள்.

(C/24712)

டயலொக் GSM
*எதிர்காலம் இன்றே.*


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.11.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.